"டிம்பர் டிரான்ஸ்போர்ட் விதிகளை தளர்த்தவேண்டுமென்று ஒரு அங்கத்தினர் சொன்னார். சொந்த நிலத்திலிருந்து மரங்களை வெட்டிக் கொண்டு போகிறவர்கள் ஒரு பெர்மிட் பெறவேண்டும். ஏனென்றால், ரிசர்வ் காடுகளிலிருந்து மரங்களை வெட்டிக்கொண்டு போகிறார்கள் என்று சொல்லலாம். அதற்காக இந்த நிபந்தனை இருக்கிறது. இதன் அவசியத்தை எல்லோரும் உணரவேண்டும். ஆனால், இது பலருக்கு இம்சையாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. எந்த விதத்திலே இந்த விதிகளை மாற்றியமைப்பது என்றுதான் நாங்கள் தீவிரமாக யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

"மாடுகள் மேய்ச்சல் விஷயத்தில் ஒரு பிராந்தியத்தில் இத்தனை மாடுகள்தான் மேயலாம் என்று இருக்கிறது. மாடுகளுடன் மனிதர்களும் போகிறார்கள். ஓரளவுக்கு நிபந்தனை இல்லையென்றால் காடுகளைச் சரிவர பாதுகாக்கமுடியாது."

DEPUTY SPEAKER :—"How much more time will the Hon. Minister take ?"

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—"Just a minute or two more.

"கூப் கட்டிங் எதற்கு என்று சில அங்கத்தினர்கள் சொன்னார்கள். இதனால் ஓரளவு மரங்களும், காடுகளும் பாதிக்கப்படுகின்றன என்றாலும், காடுகளில் கூப் வெட்டாமல் இருக்கமுடியாது. கூப் எடுப்பதால்தான் காடுகள் அழிந்துவிடுகின்றன என்று சேலம் அங்கத்தினர் கனம் எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் சொன்னார்கள். மரங்களைப் பாதுகாக்கவேண்டியதுதான். ஆனால் விறகும் வேண்டியிருக்கிறது. அதனால் இவைகளுக்கெல்லாம் ஒரு பிளான் போட்டுக்கொண்டு, பிறகு அதற்கு ஏற்றவாறு செய்ய திட்டமிடவேண்டும். இப்போது நடைமுறையில் செய்யப்படுவதில் தவறுகள் இருக்கலாம். அந்தத் தவறுகளைப் படிப்படியாக போக்கவேண்டுமேயொழிய, அவைகளை மிகைப்படுத்திச் சொல்வதில் பயன் ஒன்றுமில்லை. ஆகவே இவ்வளவு பேராதரவு அளித்த கனம் அங்கத்தினர்கள், இனிமேலும் ஆதரவு அளித்து இந்த காட்டுச் செல்வத்தை மேலும் மேலும் வளர்ப்பதற்கு அரசாங்கத்திற்கு தங்களுடைய பரிபூரண ஆதரவைக் கொடுப்பார்கள் என்று நம்புகிறேன். அதோடு இந்த வெட்டுப் பிரேரணையைக் கொண்டுவந்த கனம் அங்கத்தினர் அவர்களும், இதை ஓட்டுக்குவிட மேலும் வற்புறுத்தமாட்டார்கள் என்ற நம்பிக்கையோடு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்." 11-35 a.m.

[8th March 1955

* SRI P. K. GOPALAKRISHNAN :—" The Hon. the Minister has made a very good speech and we welcome the speech he made in Tamil. But we would request him, Sir, to have the speech translated in Malayalam and Kannada and printed and supplied to the Members from the West Coast at some future time."

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" I shall be glad to invite my Malayalam and Kannada friends who have not been able to follow my Tamil speech to meet me and I am prepared to address them separately, even in this chamber itself, at some convenient time. I shall address them in English."

DEPUTY SPEAKER :—" Does the hon. Member, Mr. K. C. Gopalan Unni, withdraw his cut motion? "

* SRI K. C. GOPALAN UNNI :—" I withdraw my cut motion, Sir."

The cut motion was by leave of the House withdrawn.

DEPUTY SPEAKER :—" I shall now put the Demand to vote. The question is—

' That the Government be granted a sum not exceeding Rs. 67,62,300 under Demand IV—Forest Department.' "

The motion was carried and the grant was made.

(2) DEMAND XVIII—AGRICULTURE AND FISHERIES.

(3) DEMAND XIX—VETERINARY.

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" Sir, on the recommendation of the Governor, I move—

' *That the Government be granted a sum not exceeding Rs.* 1,90,11,200 *under Demand XVIII—Agriculture and Fisheries.*' "

* SRI M. NARAYANA KURUP :—" Sir, last time it was pointed out that whenever any Demand was moved by the Hon. the Minister in charge of it, a statement explaining the policy of the Government should be made. The practice was consistently followed and I do not know why it was given up this time."

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" I did make a speech last time when I moved the Demand explaining the policy of the Government. But several hon. Members complained that I was taking away their time by making an unnecessarily long speech. Apart from that, there is no change in the policy of the Government already enunciated last year. Therefore, I do not choose to take the time of the House. Whatever I have to say, I shall say at the end. If there is any question of policy involved in the discussion, I shall enunciate our policy also with regard to such questions."

8th March 1955]

* DR. K. B. MENON :—" May I submit that a statement from the Minister before asking for allotment is necessary in order to provide the Members with information? The statement should therefore precede and not follow the discussion. I would request the Hon. the Minister to follow this custom for the future also."

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" I would like to submit that whatever information I could give by way of a statement, I have already given while answering so many questions put in this House on this subject."

* SRI M. NARAYANA KURUP :—" If a statement is made and circulated, then we will get all necessary information regarding the policy of the Government as well."

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" If Government think there is anything worth while preparing and circulating, they will certainly do so."

* DR. K. B. MENON :—" As it will not be fair to take the time of the Members from Malabar and South Kanara outside the Assembly hours, may I request the Hon. the Minister to make available his statement in Tamil translated and printed."

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" I do not know anything. It is for you, Sir, to consider whether it would be feasible and practicable. Anyhow, I have no doubt hon. Members would not find it difficult to meet and enable me to discuss this subject with them."

SRI S. SWAYAMPRAKASAM :—" Sir, I move— 11-40 a.m.

' *That the allotment of Rs.* 1,90,11,200 *under Demand XVIII —Agriculture and Fisheries be reduced by Rs* 100.' "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" Sir, on the recommendation of the Governor, I move—

' *That the Government be granted a sum not exceeding Rs.* 45,44,800 *under Demand XIX—Veterinary.*' "

SRI S. RAMALINGAM :—" Sir, I move—

' *That the allotment of Rs.* 45,44,800 *under Demand XIX—Veterinary be reduced by Rs.* 100.' "

DEPUTY SPEAKER :—" The Demands and the cut motions are before the House for discussion."

Sri S. Swayamprakasam began to speak in Tamil.

" இன்றைய தினம் . . . "

* SRI S. PANCHAKSHARAM :—" I rise on a point of information, Sir. The hon. Gentleman in the Opposition said that he was not able to follow when the Minister for Agriculture spoke in Tamil. I do not know whether he will be able to follow when Mr. Swayamprakasam speaks in Tamil. If he was able to follow

[Sri S. Panchaksharam] [8th March 1955

the Tamil speeches of Sri P. Ramamurthi, Leader of the Opposition, and Sri M. Kalyanasundaram, Deputy Leader of the Opposition, I do not know why he says that he was not able to follow the Tamil speech of the Hon. the Minister for Agriculture.''

* DR. K. B. MENON :—'' Apart from politics, I may tell the hon. Member sitting opposite that the Members from Malabar are able to follow Tamil speeches if they closely listen to them, because there is a large percentage of words that is common to Tamil and Malayalam languages. The Members from South Canara are unable to understand Tamil and it is more for them the request is made.''

* SRI S. SWAYAMPRAKASAM :—'' கனம் உபதலைவர் அவர்களே, தமிழிலே பேசினால் டாக்டர் மேனன் ஆகியோர் புரிந்துகொள்ள முடியும் என்று ஸ்ரீ பஞ்சாட்சரம் செட்டியார் கூறுகிறார்கள். இச் சந்தர்ப்பத்தில் தமிழைப் பின்பற்றித்தான் எல்லா மொழிகளும் வந்திருக்கின்றன என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

'கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும்
உன்னுதிரத் துதித்தெழுந்தே ஒன்றுபல வாயிடினும்
ஆரியம்போல் உலக வழக்கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறன்வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே.'

என்று சொல்வதுபோல் தமிழ் மொழியிலிருந்து எல்லா மொழிகளும் தோன்றியிருக்கின்றன என்பதை தெரிவித்து, தமிழிலேயே பேச விரும்புகின்றேன்.

'' இன்றையதினம் விவசாயம், மீன் இலாகாக்களில் இருக்கும்படியான குறைகளை எடுத்துக்கூறி, அதிலே அரசாங்கத்தினுடைய போக்கை எடுத்து விளக்கி, எந்த விதத்தில் செயலாற்றினால் மக்களுக்கு சிறந்த வழியில் பணியாற்ற முடியும் என்பதைக் கூறுவதற்காகவே இந்த வெட்டுப் பிரேரணையை கொடுத்திருக்கின்றேன்.

'' விவசாய இலாகாவும், மீன் இலாகாவும் மிக முக்கியமானதாகும். அதிலும் யுத்த காலத்திற்கு பிறகு உண்மையிலேயே இரண்டு இலாக்காகள் மிக முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன. ஒன்று விவசாய இலாகா, மற்றொன்று கூட்டுறவு இலாகா என்று சொல்லப்பட்டு வருகின்றது. இவ்வாறு சொல்பவரில் நானும் ஒருவன். ஆகையால் இந்த இலாகாவின் நடவடிக்கைகள் ஒழுங்காக நடக்கவேண்டியது மிக மிக முக்கியமாகும். கடந்த சில ஆண்டுகளாக நாட்டிலே பருவமழை பெய்யாததினால் விவசாயிகள் பட்ட கஷ்டங்களை நாம் அறிவோம். ஆனால் சென்ற ஆண்டில் இருந்த ஒரு பரபரப்பு இன்று விவசாயிகளிடத்திலே இல்லை. காரணம் பல வருஷங்களாக மழை இல்லாது சென்ற ஆண்டு பருவ மழை பெய்தது. இப்போது ஓராண்டு ஆகிவிட்டது. ஆனால் பருவ மழை பெய்வதற்கு முந்திய வருஷம், அதாவது மழை பெய்யாத காலத்து விதை விதைக்கப்பட்டு, ஒருவிதப் பலனையும் காணாது கண் கலங்கியதும், அந்தச் சமயத்தில் இந்த விவசாய இலாகாவானது சில உதவிகள் செய்ததும், நினைத்த அளவிற்கு பலன் கிடைக்காமல் போய்விட்டது. இந்த இலாகாவிலே குறைபாடுகள் இல்லை யென்று சொல்லமுடியாது. இந்த விஷயத்தைப்பேசிய காலத்தை எடுத்துக்கொண்டால், சாதாரணமாக அப்போது தஞ்சை ஜில்லாவிலே நெற்பயிர்களுக்கு நோய் வந்தது. அதைத் தடுப்பதற்கு தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டும் தடுக்க முடியவில்லை. அதற்கு Un precedented attack என்று சொல்லப்படுகிறது. அதாவது தவிர்க்கமுடியாத வியாதி என்று கூறப்படுகிறது. இதற்கு முக்கிய காரணம், பருவமழை இன்மையே என்று சொல்லலாம்.

8th March 1955] [Sri S. Swayamprakasam]

"சில தினங்களுக்குமுன் நெல் விலை இறங்கியிருக்கின்றது என்று சொல்லுகின்ற காலத்திலே, அதற்குக் காரணம் என்னவென்று பார்க்கும்போது இந்த ஆண்டு தஞ்சை ஜில்லாவிலே 10 சத விகிதம் விளைச்சல் அதிகரித்திருக்கிறது என்று கூறப்படுகின்றது. வேறு காலங்களில் இல்லாமல் சாதாரணமாக விளைச்சல் கண்டிருப்பதற்குக் காரணம் பருவ மழை என்பதை யாரும் ஒப்புக்கொள்வார்கள். அதனால்தான் இன்று விவசாயிகள் முந்திய வருஷங்களில் இருந்ததைப்போல் அல்லாமல், சமாதான முறையிலே இன்று பயிர் செய்து வருகின்றார்கள். விவசாய இலாகாவில் இருந்த தக்க சாதனங்களைக்கொண்டுதான் இவ்வாறு செய்ய முடிந்தது என்று கூறமுடியாது. அப்படி கஷ்டப்பட்ட காலத்திலே இந்த இலாகாவினால் தக்க காலத்திலே, தகுந்த முறையிலே, உதவி செய்தும் வியாதியைத் தவிர்க்க முடியவில்லை. அப்படி ஒரு சில இடத்தில் தவிர்க்கப்பட்டபோதிலுங்கூட, நெல் அறுவடை செய்த காலத்திலே தானியம் காணப்பட்டதே தவிர, வெறும் அரிசி இல்லாத பதராகத்தான் அறுவடை செய்ய முடிந்தது. ஆகவே இவைகளுக்கெல்லாம் பருவ மழையே காரணம் என்பதை பெரும்பாலும் எல்லோரும் தடையின்றி ஒப்புக்கொள்வார்கள். இந்த வருஷ அதிக விளைச்சலுக்கும் அதுவே காரணம். பருவ மழையில்லாது, வேறு எந்தத் தீவிர நடவடிக்கை எடுத்தும் பயனில்லை. இதை இன்றைய சாதாரண விவசாயி கூட பேசிக்கொள்கிறான். ஆகவேதான் மழை பெய்யாத காலங்களில் மழை உண்டாக்குவதற்காக, செயற்கை முறையில் மழை பெய்ய பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. காலத்தில் பெய்யக்கூடிய மழைதான் முக்கியம். இதனைத்தான் வள்ளுவர்,

> 'விசும்பிற் றுளிவீழின் அல்லால்மற் றாங்கே
> பசும்புற் றலைகாண் பரிது'

என்ற குறளால் விளக்குகின்றார். வானத்திலிருந்து ஒரு துளி மழை யாவது பெய்தால் தான், புல்லும் முளைக்க முடியுமாம். அதனால் பருவ மழையின் அவசியத்தை இப்பாடலால் நன்கு உணரலாம்.

"இந்த இலாகாவிலே அதிகமான டெமான்ஸ்டிரேட்டர்கள் காணப்படுகின்றார்கள். ஆனால் உள்ளபடியே அவர்கள் மக்களிடையே போய் ஒன்றும் சொல்வது கிடையாது. ஒரு இலாகா மிக முக்கியமானது என்று சொன்னவுடனேயே, அந்த இலாகா அதிகாரிகள் அதிகமாக செலவிடுவதும், அதிகமான பேர்களை வேலைக்கு அமர்த்திக் கொள்கிறார்களே தவிர, அப்படி அமர்த்திக் கொள்வது தகுந்த முறையா? அதனால் அதற்குத் தக்க பலன் உண்டா என்பதை சிந்திப்பதே கிடையாது. இதைத்தான் இன்று பார்க்கின்றோம். ஒரு இலாகா மிக முக்கியமானது என்று சொன்னவுடனே, எங்களுக்கு ஸ்பெஷல் ஸ்டாப் (special staff) கொடுக்க வேண்டுமென்று கேட்கத்தான் அதிகாரிகளுக்கு தோன்றுகிறது. இது அவர்களிடத்திலே ஊறிக் கிடக்கின்றது. அதற்காக வேலைக்கு அமர்த்திக்கொள்ள வேண்டாமென்று சொல்லவில்லை. அதேசமயத்தில் அப்படி அமர்த்திக்கொள்வதால் நன்மை உண்டா என்பதை கண்ணுங் கருத்துமாக பார்க்கவேண்டும். இப்படிச் செய்வதால், நல்லமுறையிலே இலாகாவை நடத்தமுடியுமா என்ற நோக்கத்தோடு அதிகாரிகள் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"நான் பார்த்தவரையில் விவசாய டெமன்ஸ்டிரேட்டர்கள் சாதாரணமாக தாலூகா சென்டரில்தான் இருக்கிறார்கள். ஆனால் விவசாயிகள் கிராமங்களில் இருக்கிறார்கள். இவ்விரண்டு பேருக்கும் டூர் போகின்ற முறையில்தான் சம்பந்தமுண்டு. டெமன்ஸ்டிரேட்டர் காலையில் 11 மணிக்குப் புறப்பட்டு சுற்றுப்புறமுள்ள கிராமங்களைச் சேர்வதற்குள், எவ்வளவு துரிதமாகப்போனாலும், விவசாயிகள் வயலுக்குப் போய் இருப்பார்கள். ஆகையால் தாலூக்கா சென்டரில் இருப்பதைவிட, கிராமப்பகுதிகளில் டெமன்ஸ்ட்ரேட்டர் தங்குவதற்கு, அரசாங்கம் ஏற்பாடுசெய்தால், இவர்களுக்கிடையே உள்ள சம்பந்தம் கொஞ்சம் உபயோகப்படக்கூடிய முறையில் இருக்கும் என்று சொல்ல ஆசைப்படுகிறேன். 11-52 a.m.

[Sri S. Swayamprakasam] [8th March 1955

"இந்த டிபார்ட்மெண்டு அதிகாரிகளுக்கு, நேற்று கேள்வி நேரத்தில் சொல்லியதுபோல், விவசாயிகளுடன் பழகுவதற்குச் சில வார்த்தைகள் தமிழில் விவசாயக் கல்லூரியில் சொல்லிக் கொடுத்தால் நன்றாக இருக்கும். விவசாயிகளிடத்தில் இப்பொழுது டெமன்ஸ்ட்ரேட்டர் போன்றவர்கள் ஆங்கிலத்தில்தான் பேசுகிறார்கள். விவசாயிகள் புரிந்துகொள்ளாத வகையில் இந்த அதிகாரிகள் பேசுவது குறையாகத்தான் இருக்கிறது. ஆனால் எல்லா அதிகாரிகளும் அப்படித்தான் செய்கிறார்கள் என்று நான் சொல்ல விரும்பவில்லை. இருந்தபோதிலும், இந்த டிபார்ட்மெண்டு அதிகாரிகள் மற்ற அதிகாரிகளைப்போல் மேற்பார்வை பார்க்கும் தன்மையை அகற்றி, கிராமத்தார்களிடம் நல்லமுறையில் பழகும் மனப்பான்மையை அடைந்தார்களானால்தான் நல்லது என்பதை அரசாங்கத்தாருக்கு எடுத்துக்காட்ட ஆசைப்படுகிறேன்.

"உழுவதில் ஆழ உழுவது, அகல உழுவது என இரண்டுவகை உண்டு. சாதாரணமாக குறைந்த அளவில் நிலம் வைத்திருப்பவர்கள் ஆழ உழவேண்டும். அவர்களுக்குத்தக்க வசதி செய்யவேண்டும். அதிக நிலப்பரப்புடையவர்கள், அகல உழவேண்டும். அரசாங்கம் விவசாயம் அதிகரிப்பதற்காக, மிஷின்களையும், பம்பு செட்டுகளையும், டிராக்டர்களையும், இதர கருவிகளையும் கொடுக்கிறார்கள். இம்மாதிரி வசதிகள் செய்துகொடுத்தால்தான் உற்பத்தி அதிகமாவதற்கு இடம் உண்டு. ஆனால் இம்மாதிரியான வசதிகள் அதிக செல்வாக்குள்ளவர்களுக்குத்தான் கிடைக்கிறது, சாதாரண விவசாயிகளுக்கு அவைகள் கிடைப்பதில்லை என்ற எண்ணம் கிராமாந்தர விவசாயிகளிடம் பரவிக்கொண்டு வருகிறது. இந்த எண்ணத்தை அகற்றுவதற்கு எளியமுறையில் இவ்வசதிகள் காலாகாலத்தில் சிறிய விவசாயிகளுக்கு கிடைப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்ய வேண்டும்.

"இதற்குப் பிறகு விவசாயிகளுக்கு உரப்பொருள்கள் கொடுக்கப்படுகின்றன. இவற்றில் இரசாயன உரம் என்றும் தழை உரம் என்றும் இரண்டு வகைகள் உண்டு. தழை உரத்தைப்பற்றி தற்போதைய விவசாய டைரெக்டர் Sri M. S. Sivaraman, I.C.S. சொல்வது புதிது அல்ல. அவர் தஞ்சை ஜில்லாவில் கலெக்டராக இருந்தபோதும், அதைப்பற்றியே பேசிக்கொண்டு இருப்பார். புங்கமரத்தை வளர்க்க வேண்டும் என்று எப்பொழுதும் சொல்லிக்கொண்டே இருப்பார். ஆனால் கீழ் அதிகாரிகள் அதை முற்றிலும் பின்பற்றுவதில்லை. இதன்காரணமாக, அவர் கேம்ப் போகிற இடங்களில் எல்லாம் அங்குள்ள அதிகாரிகள் புங்கமரத்தின் கிளைகளை ஒடித்து நட்டு விடுவார்கள். இவ்விஷயம் அவருக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் எனக்கு நன்றாகத் தெரியும்.

"புதிதாக வந்திருக்கும் தழை உரங்களைவிட நம் நாட்டிலேயே இருந்த தழை உரங்களைப்பற்றி மக்களுக்கு உற்சாகத்துடன் எடுத்துச்சொன்னால் நன்றாக இருக்கும். நாற்றங்கால் நிலம் நாற்றுகளைப் பிடுங்கின பிறகு சக்தி குறைந்து இருக்கும். இந்நிலத்திற்கு எருக்கம் தழையையும் மற்ற சில தழைகளையும் போடுவது உண்டு. இப்பொழுது இது போன்றவைகளை மக்கள் புறக்கணிக்க ஆரம்பித்து இருக்கிறார்கள். இத்தழை உரங்களை அபிவிருத்தி செய்ய விவசாயிகளுக்கு உற்சாகம் அளித்தால், தழை உரம் மிகவும் மலிவாகவும் அதிக அளவிலும் கிடைத்து, சிறிய விவசாயிகளுக்கு கொஞ்சம் உதவியாக இருக்கும் என்பதை அரசாங்கத்துக்கு எடுத்துக்காட்ட ஆசைப்படுகிறேன்.

"இரசாயன உரம் காலாகாலத்தில் விவசாயிகளுக்கு கிடைப்பதில்லை. காலாகாலத்தில் மனுப்போட்டாலும், ஸ்டாக் இல்லை என்ற காரணத்தினால், வேண்டுமென்ற சமயத்தில் கிடைக்காமல் அறுவடைக்காலத்தில்தான் கிடைக்கிறது. தக்கவேளையில் இது விவசாயிக்குக் கிடைப்பதற்கு தகுந்த ஏற்பாடு செய்யவேண்டும். இந்த இரசாயன உரத்தின் விலையும் சிறிது அதிகமாகத்தான் இருக்கிறது. சாதாரண விவசாயிகள் வாங்கும்படியாக இதன் விலை குறைக்கப்படவேண்டும்.

8th March 1955] [Sri S. Swayamprakasam]

"அடுத்தபடியாக என்ஜினீரிங் டிபார்ட்மெண்ட்டை எடுத்துக்கொண்டால், அதன் செலவிற்காக சுமார் மூன்று லக்ஷத்திற்குமேலாக ஒதுக்கி வைக்கப்பட்டு இருக்கிறது. இப்பணம் லாரிகள், ஜீப்கள், பம்பு செட்டுகள் வாங்குவதற்கும் உபயோகமாக இருக்கும். அவைகளைப் பராமரிப்பதற்கும், அவைகளுக்கு வேண்டிய பெட்ரோல் செலவிற்குமட்டும் ரூ. 1,40,000 செலவாகிறது. இப்பொழுது இந்த லாரிகளும் ஜீப்களும் அநாவசியமாக உபயோகிக்கப்படுகின்றன என்ற ஒரு எண்ணம் மக்களிடையே உலவி வருகிறது. இதை அரசாங்கம் கவனித்துப் பார்க்கவேண்டும். இவைகளை அவசியமான வேலைக்குமட்டும் பிரயோஜனப்படுத்தவேண்டும்.

"விவசாயக் கல்லூரியில் சாதாரணமாக மாணவர்களைச் சேர்க்கும் காலத்தில் விவசாயம் தெரிந்த குடும்பத்திலிருந்து வருகிற மாணவர்களைச் சேர்ப்பதில் முதலிடம் கொடுக்க வேண்டும். பின்னடி மற்றவர்களுக்கு இடம் கொடுத்தால் நன்றாக இருக்கும். இயற்கையாகவே உத்சாக மனப்பான்மை இருந்தால்தான் அந்த டிபார்ட்மெண்டில் அக்கறை காட்ட முடியும் என்பதை கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். 12-01 p.m.

"இந்த டிபார்ட்மெண்ட் சம்பந்தமாக கொஞ்ச நாட்களாக பலவிதமான மனுக்கள் வந்துகொண்டிருக்கின்றன. டைரெக்டர் ஆப் அக்ரிகல்சருக்கு வேண்டியவர்களுக்கு சில சலுகைகள் கொடுக்கப்படுகிறது என்ற முறையில் புகார்கள் வருகின்றன. அவருடைய ஆபீசில் ப்ரமோஷன் கொடுக்கிற காலத்தில் ப்ரமோஷனுக்கு லாயக்காக இருக்கிறவர்களுக்கு ப்ரமோஷன் கொடுக்காமல் சிலரை விட்டு விட்டு மற்றவர்களுக்கு சலுகை கொடுக்கப்படுகிறது என்று கையெழுத்துப் போடாமல் கடிதங்கள் வந்துகொண்டிருக்கின்றன. அதில் எவ்வளவு தூரம் உண்மை இருக்கிறதோ இல்லையோ அது தெரியவில்லை. உண்மை இல்லாமல் இருக்காது. உண்மை கொஞ்சமாவது இருக்கும் என்றுதான் தோன்றுகிறது. கனம் மந்திரி அவர்கள் இதை கவனிக்க வேண்டும். இதைப்பற்றி தனிப்பட்ட முறையில் பேச வேண்டுமென்றாலும் பேசுவதற்கு தயாராக இருக்கிறேன். இதில் கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"மீன் இலாகாவைப்பற்றி ஒரு வார்த்தை. சாதாரணமாக ஒரே ஒரு விஷயத்தில்தான் எங்களுக்கு வருத்தமாக இருக்கிறது. அது என்னவென்றால் கனம் மந்திரி அவர்கள் மீன் சாப்பிடும் மந்திரியாக இல்லையே என்பதுதான் (சிரிப்பு). ஆனால் மறைமுகமாக சாப்பிடுகிறாரோ என்னமோ தெரியாது. இப்பொழுது நாட்டில் பார்த்தால் மீன் மலிவாக கிடைக்கவே இல்லை. மீன் உற்பத்தி அதிகமாக இருக்கிறதோ இல்லையோ என்பதும் சந்தேகமாக இருக்கிறது. நாம் 'Consumer's point of view-ஐ' பார்க்க வேண்டும். இப்பொழுது மீன் இலாகா இருந்தும் யுத்த காலத்திற்கு பின் அதிகமாக மீன் உற்பத்தி செய்யவில்லை. மார்க்கெட்டில் கண்ட்ரோல் விலைக்குக் கிடைக்காமல் இருக்கிறது. இதை அரசாங்கம் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"அதன் பிறகு இங்கே இருக்கக்கூடிய மீனவர்களுக்கு தகுந்தபடி சலுகைகள் கொடுக்கவில்லை என்ற புகார் அதிகமாக இருக்கிறது. இந்த இலாகாவில் மீனவர்களுடைய இனத்திலிருந்து மாணவர்களை எடுத்து அவர்களுக்கு பயிற்சி அளிக்க சலுகை காட்டுவது இல்லை என்ற புகார் இருந்துகொண்டிருக்கிறது. ஆட்கள் இருந்தும், தகுதியுள்ளவர்கள் இருந்தும் அவர்களை புறக்கணிக்கிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது. இம்மாதிரியான புகார்களுக்கு இடம் இல்லாமல் அரசாங்கம் பார்த்துக்கொள்ள வேண்டும்.

"வெளியே இருக்கும் குளம் குட்டைகளில் மீன் பிடிப்பதற்கு சலுகைகள் கொடுக்கவேண்டும். மீனவர்களுக்கு சங்கங்கள் அமைத்துக் கொடுக்க வேண்டும். அதன்மூலம் அவர்களுக்கு சலுகைகள் கொடுத்து வருவதற்கு உத்தரவு இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அந்த மாதிரி பல இடங்களில் கொடுக்காமல் அவர்களுக்கு இஷ்டப்பட்டவர்களுக்கு கொடுத்து வருகிறார்கள். அப்படி இல்லாமல் மீனவர்களுடைய சங்கங்கள்மூலம் இஷ்டப்பட்டவர்களுக்குக் கொடுக்க வேண்டும்.

[Sri S. Swayamprakasam] [8th March 1955

"அடுத்தபடியாக சமுத்திரத்தில் மீன் பிடிப்பு வேலைகள் செய்வதற்கு என்று மிஷின்களை வரவழைத்து டிபார்ட்மெண்டில் வைத்துக் கொண்டிருந்தும் அவைகளை உபயோகப் படுத்தவில்லை என்று கேள்விப்படுகிறேன். அவ்விதம் இல்லாமல் மீனவர்கள் அதை உபயோகப்படுத்துவதற்கு வசதி கொடுக்க வேண்டும். அப்படி உபயோகப்படுத்தப்படாமல் வைத்து இருப்பது நாட்டிற்கு நல்லது அல்ல. அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் மீனவர்களுக்கு அவைகளில் வேலை செய்வதற்கு வசதி செய்து கொடுக்க அரசாங்கம் தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டும்.

"அதன் பிறகு கட்டுமரங்களை வாங்கிக் கொடுப்பதற்கு அவர்களுக்கு சலுகை காட்டவேண்டும். கட்டு மரங்களை வாங்கிக் கொடுப்பதற்கான டிப்போக்களை இப்பொழுது அரசாங்கம் வைத்துக்கொள்ளவில்லை. குறைந்த விலைக்கு மீனவர்களுக்கு கட்டுமரங்களை வாங்கிக் கொடுப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்ய வேண்டும். இப்படிப்பட்ட மீனவர்களுடைய காரியங்களை பார்த்துக்கொள்வதற்கென்று ஒரு அட்வைசரி கமிட்டி என்ற ஒரு கமிட்டியை நியமித்துக் கொள்வது நல்லது என்று சொல்லிக்கொண்டு என்னுடைய வெட்டுப் பிரேரேபணையை பிரேரேபிக்கிறேன்."

DEPUTY SPEAKER :—"Ten minutes are allotted for hon. Members who participate in this Demand."

SRI S. RAMALINGAM :—"கனம் உதவி சபாநாயகர் அவர்களே, விவசாய இலாகா மான்யம், மீன் இலாகா மான்யம், கால்நடை இலாகா மான்யம் முதலியவைகள் சபையின் முன்பு விவாதத்தில் இருக்கின்றன. நமது நாடு ஒரு பெரிய விவசாய நாடு என்பது அநேகமாக இங்கே இருக்கக்கூடிய எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஆகவே அரசாங்கம் எந்த அளவில் பொது மக்களுக்கு சேவை செய்கிறதோ அந்த அளவுக்கு நமது நாடு விவசாய அபிவிருத்தி அடைகிறது. அந்த அளவுக்குத்தான் இந்நாடு படிப்படியாக முன்னேறும். 'வரப்புயர கோன் உயரும்' என்ற பழைய தமிழ்ப் பழமொழி ஒன்று இருக்கிறது. அதை மீண்டும் சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன்.

"விவசாய இலாகா பல ஆராய்ச்சிகளைச் செய்து வருகிறது. அதன் மூலம் அபிவிருத்தி செய்துகொண்டும் வருகிறது. நெல், கரும்பு, கடலை, பருத்தி முதலிய பல்வேறு தான்ய பொருள்களை அபிவிருத்தி செய்வதற்கு ஆராய்ச்சி நடந்து கொண்டிருந்தாலும் சாதாரணமாக ஏழை மக்களுக்கு எந்த அளவிற்கு அது எட்டியிருக்கிறது என்று பார்த்தால் அவர்கள் செய்திருக்கக்கூடிய ஆராய்ச்சியின் பலன் இன்னும் பிரதானமாக மக்களுக்கு கிடைக்கவில்லை என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். சர்க்காரும், சர்க்காருடைய விவசாய இலாகாவும் இரண்டு மூன்று வருஷங்களாக கெமிக்கல் மான்யூர், பசுந்தாள் உரம் போன்றவைகளை அதிகமாக உபயோகப்படுத்தினால் அதிகப்படியான உற்பத்தியை பெருக்க முடியும் என்று பிரசாரம் செய்துகொண்டு வருகிறார்கள். அப்படி பிரசாரம் செய்துகொண்டு வந்தாலும்கூட விவசாயிகளுக்கு சீமை உரங்கள் கிடைப்பதற்கு நடவடிக்கை என்ன எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று பார்த்தால் அது மிகவும் வருத்தப்பட வேண்டிய விஷயமாக இருக்கிறது. குறிப்பாக தஞ்சை ஜில்லாவில் மட்டும் சுமார் 13 லட்சம் ஏக்கர் சாகுபடியாகக் கூடிய நிலம் இருக்கிறது. இந்தியாவிலேயே ஒரு தனி ஜில்லாவை எடுத்துக்கொண்டால் இந்த அளவிற்கு அதிகமாக நெல் உற்பத்தி செய்யும் ஜில்லா வேறு கிடையாது என்று சர்க்காருடைய அறிக்கையே கூறுகிறது. இதைக் கண்டு அந்த ஜில்லாவிலிருந்து வரக்கூடிய நான் பெருமை அடைகிறேன்.

"அதுமட்டுமல்ல. 13 லட்சம் ஏக்கர் சாகுபடி செய்யவேண்டுமென்றால் அதற்குத் தேவையான உரம்—ஏற்கெனவே மாகாணத்தில் உபயோகப் படுத்தி வந்த உரங்களாகிய குப்பை, சாணம், பசுந்தாள்—சுமார் 26 லட்சம் டன் தேவைப்படுகிறது. இன்னும் அம்மோனியம் சல்பேட் என்ற

8th March 1955] [Sri S. Ramalingam]

சீமை உரம் சுமார் 90 ஆயிரம் டன் தேவைப்படுகிறது. இப்படி சர்க்காருடைய புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. அந்த அளவிற்கு ஜில்லாவில் உரம் கிடைக்கிறதா என்று பார்த்தால் ஏற்கெனவே கிடைத்து வந்த 5 லட்சம் டன் தான் கிடைக்கிறது. அதாவது தேவையில் ஐந்தில் ஒரு பங்கு அம்மோனியம் சல்பேட் 9 ஆயிரம் டன்தான் சென்ற வருஷத்தில் விநியோகம் செய்திருக்கிறார்கள். அது பத்தில் ஒரு பங்கு. சூபர்பாஸ்பேட் உரம் 15-ல் ஒரு பங்கு அங்கே விநியோகிக்கப்பட்டிருக்கிறது. சீமை உரம், பசுந்தாள் உரம், கம்போஸ்ட் உரம்தான் மக்கள் அதிகமாக உபயோகிக்க வேண்டும் என்று ஒருபுறம் சொல்லிக்கொண்டிருந்தாலும்கூட அங்கே ஜில்லாவிற்கு தேவையான அளவிற்கு சப்ளை செய்யப்படுகிறதா, அதற்கு சர்க்கார் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்களா என்றால் பத்தில் ஒரு பங்கு சீமை உரமும், 15-ல் ஒரு பங்கு மற்ற உரமும் கொடுக்கப்படுகிறது. ஆர்கானிக் மானியூர் ஐந்தில் ஒரு பகுதி கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த அளவில் பற்றாக்குறை இருக்கிறது. விவசாயிகளுக்கு உரம் எந்த அளவில் தேவை இருக்கும் என்பதும் எந்த அளவில் அதற்கு டிமாண்ட் இருக்கும் என்பதும் அவர்களுக்குத் தெரியும்.

"சென்ற ஆண்டில் உரம் விநியோகம் விஷயத்தில் சர்க்கார் ஒரு புதிய முறையை கையாண்டார்கள். சென்ற வருஷம் கூட்டுறவு மூலமாகவும் தனிப்பட்டவர்கள் மூலமாகவும் உரம் விநியோகம் செய்தார்கள். அதனால் எவ்வளவோ கஷ்டங்கள் ஏற்பட்டிருந்தன. அப்படிப்பட்ட கஷ்டங்கள் சர்க்காரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கின்றன. விவசாயிகள் தங்களுக்கு உரம் வேண்டுமென்றால் முன்சீப்பினிடம் கையெழுத்து வாங்கிக்கொண்டுபோய் டிப்போவில் கொடுத்தால் அங்கு உரம் கொடுப்பார்கள் என்ற நிலைமை இருந்தது. அப்படி கையெழுத்து வாங்கிக் கொண்டுபோய் கொடுத்தால் "இப்பொழுது உரம் கொடுக்கும் படியாக இல்லை" என்று சொல்லிவிடுகிறார்கள். 100 ரூபாய்க்கு உரம் வேண்டுமென்றால் 75 ரூபாய்க்குத்தான் கொடுக்கிறார்கள். இன்னும் சரக்கு வரவில்லை என்றும், இன்னும் 5, 6 நாட்களுக்குப் பிறகு வேண்டுமென்றால் வந்து வாங்கிக்கொள்ளுங்கள் இல்லாவிட்டால் கையில் பணத்தை வாங்கிக்கொண்டு போய் வேறு இடத்தில் வாங்கிக்கொள்ளுங்கள் என்று சொல்லி விடுகிறார்கள். ஐந்து மூட்டைகள் வேண்டுமென்றால் மூன்று மூட்டைகள்தான் கொடுக்கிறார்கள். பாக்கி இருக்கும் இரண்டு மூட்டைகளுக்கு பணம் திரட்டிக் கொடுத்து விடுகிறார்கள். இம்மாதிரி செய்வதால் கள்ள மார்க்கெட்டில் தெருவில் வாங்க வேண்டியதாக இருக்கிறது. 100 ரூபாய்க்கு உரம் வாங்க வேண்டுமென்றால் சர்க்கார் கடனாகக் கொடுப்பது ரூ. 75 தான். பாக்கி ரூபாய் விரயமாகிறது. இரண்டு வருஷங்களுக்கு முன்பு சர்க்கார் subsidy கொடுத்து விவசாயிகளுக்கு சல்லிசான முறையில் கொடுத்து வந்தார்கள், இப்பொழுது அதை நிறுத்தி விட்டார்கள். ஆனால் இன்றைக்கு என்ன நடக்கிறது? பகிரங்க மார்க்செட்டில் விவசாயிகளுக்குக் கிடைப்பதற்கு பதிலாக கள்ள மார்க்கெட்டில் அதிக ரேட் கொடுத்து வாங்க வேண்டியதாக இருக்கிறது. உரம் அதிகமாக உபயோகப்படுத்தி விவசாயத்தை அபிவிருத்தி செய்யவேண்டுமென்று சர்க்கார் என்னதான் பிரசாரம் செய்துகொண்டிருந்தாலும் அதனால் பிரயோஜனம் ஒன்றுமில்லை. ஆனால், போதிய உரம் விவசாயிகளுக்குக் கொடுக்கப்படவேண்டும். ஒரு ஜில்லாவுக்குத் தேவையான உரம் 90 ஆயிரம் டன் ஆகும். 1955-56-ல் நம் ராஜ்யத்திற்கு 150 ஆயிரம் டன் உரம்தான் செலவு பண்ணப்போகிறார்கள். ஒரு ஜில்லாவுக்கு 90 ஆயிரம் டன் தேவைப்படும்போது ராஜ்யம் பூராவுக்கும் 150 ஆயிரம் டன் என்று சொன்னால் அது இரண்டு ஜில்லாக்களின் தேவையைத்தான் பூர்த்தி செய்யும். பாக்கி ஜில்லாக்களுக்குப் போதாது. அமோனியம் சல்பேட், சீமை உரம் ஆகியவைகளை ஏராளமாகத் தருவித்து விவசாயிகளுக்குத் தேவையான அளவு கொடுப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஸ்தாபன முறை அன்றி வேறு எந்த முறையில் விவசாயிகளுக்குக் காலாகாலத்தில் உரம் சப்ளை செய்ய முடியுமோ அந்த முறையில் ஏற்பாடு செய்யவேண்டும். காலம் தவறி உரம் கொடுப்பதால் விவசாயிகளுக்கு நன்மை ஏற்படாது.

12-11 p.m.

"நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் 'கோட்டா' இன்னும் விநியோகம் ஆகவில்லை, தேங்கியிருக்கிறதென்று சொல்கிறார்கள். அடுத்த வருஷம் தண்ணீர் வந்தபிறகுதான் உரம் தேவை. இன்றிருக்கக்கூடிய ஸ்தாபன முறையை மாற்றி பூராவும் கூட்டுறவு முறையில் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக விநியோகிக்கமுடியுமா என்பதை சர்க்கார் கவனிக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

"நிதி மந்திரி அவர்கள் பட்ஜெட் பிரசங்கத்தில் சொல்லும்போது பம்ப் செட், இன்ஜின்கள் வாங்குவதற்கு கடனுக் கொடுப்பதற்கு இந்த ஆண்டில் 'சுமார் ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்போகின்றோம்' என்று சொன்னார்கள். உண்மையிலேயே அது வரவேற்கத்தக்க அம்சம். தரையிலிருந்து தண்ணீரை இறைத்து நிச்சயமாக சாகுபடி செய்வதற்கு வசதி இருக்கவேண்டியது அவசியம்தான். நடைமுறையில் இருக்கக்கூடிய கஷ்டங்களை நாம் பார்க்கவேண்டும். இரண்டு மூன்று ஆண்டுகளாக இத்திட்டம் நடைமுறையில் இருந்துகொண்டுதான் இருக்கிறது. ஆனால், சர்க்கார் ஏற்கெனவே ஒரு 'டார்கெட்' வைத்துக்கொண்டு விநியோகிக்க வேண்டும். ஒவ்வொரு ஜில்லாவிலே எத்தனை ஏற்படுத்தவேண்டுமென்று சொல்லி அதனை பொருத்தச் செய்து வியாபாரிகள் மீதியைப் பூர்த்தி செய்யமுடியாத நிலைமைதான் இருக்கும். விவசாயிகள் தங்களுக்கு வேண்டாமென்று சொல்லி விட்டுவிடுவது இல்லை. சர்க்கார் போட்டிருக்கும் நிபந்தனையைப் பூர்த்திசெய்ய முடியாத காரணத்தினால் இந்தமாதிரி பலனை விவசாயிகள் அடையமுடியாமலிருக்கிறார்கள்.

"பாங்கில் கடன் வாங்கவேண்டுமென்றால் 2,500 ரூபாய் சொத்து காண்பித்து அதற்குப் பத்திரம் ரிஜிஸ்தர் செய்து கொடுத்து நடவடிக்கை எடுத்துத்தான் வாங்கவேண்டும். அதே முறைதான் இந்த வருஷத்திலும் கையாளப்படுகிறது. அது மட்டுமல்ல. ரூ. 2,500-க்கு கடன் வாங்குவதற்கு மற்றொரு விவசாயி 2,500 ரூபாய்க்கு ஜாமீன் போட்டுக் கொடுக்க வேண்டும். ஜாமீன் கொடுத்தால் எனக்குக் கிடைக்காது என்று சொல்லி அவனுக்குக் கிடைப்பதில்லை. இரண்டு பேர்களுக்கும் கிடைக்காமல் போகிறது. திருட்டுத்தனமாக ஏமாற்றி சாட்சி கையெழுத்து போட்டு வாங்கிக் கொண்டு போகும் இந்த முறையை மாற்றி எளிய முறையில் விவசாயிகளுக்கு பம்ப் செட் கிடைக்க வகை செய்ய வேண்டும்.

"மீன் பண்ணையைப்பற்றி ஒரு வார்த்தை. எங்கள் தாலூகாவில் ஒரு சங்கம் இருக்கிறது. பர்வதகுமார கூட்டுறவு சங்கம் என்று இருக்கிறது. அதில் 9,500 மெம்பர்கள் இருக்கிறார்கள். திருத்துரைப்பூண்டி, மன்னார்குடி, பட்டுக்கோட்டை, அரந்தாங்கி ஆகிய இடங்களில் மீன் பிடிப்பதற்கு அவர்களுக்கு ஏகபோகமான உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட சிலர்தான் அந்த இடங்களில் மீன் பிடிக்கலாம் என்ற முறை இருக்கிறது. சர்க்கார் இது விஷயத்தில் கவனம் செலுத்தி, அந்தச் சங்கத்தை உடைத்தெறிந்து சிறு சிறு கூட்டுறவு சங்கங்களை ஏற்படுத்தி, உண்மையிலேயே மீன் பிடிப்பவர்களுக்கு அதிகமாக சந்தர்ப்பமும் வசதியும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்."

12-16 p.m. **Sri P. G. KARUTHIRUMAN** :—"கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்று நமது விவசாய மந்திரியார் அவர்கள் கொடுத்த பிரேரணையை நான் ஆதரிக்கிறேன். அகில இந்தியாவில் பல்வேறு ராஜ்யங்களிலுள்ள விவசாய இலாக்காக்களையும் நமது ராஜ்ய விவசாய இலாகாவையும் எடுத்து ஒத்திட்டுப் பார்ப்போமானால் நமது ராஜ்ய விவசாய இலாகாதான் தலைசிறந்து விளங்கிக்கொண்டு வருகிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

"உதாரணமாக, கோயமுத்தூர் ஜில்லாவில் உற்பத்தி செய்யப்பட்ட கரும்பு தான் அகில இந்தியாவிலேயே மிக உயர்ந்ததாக இருக்கிறது; உலகினராலும் போற்றப்படுகிறது. மற்றும் ஆராய்ச்சிப் பண்ணையில் இருக்கும்படியான உயர்ந்த தரமுள்ள வித்துக்கள், உயர்ந்த ரக நெல் வித்துக்கள் அதிக பலன்கள் கொடுத்திருக்கின்றன.

8th March 1955] [Sri P. G. Karuthiruman]

"யுத்தத்திற்கு முன்னால் விவசாய இலாகாவைப்பற்றியே கவனம் இல்லாமல் கிடந்தது; பொதுமக்களுடைய தொடர்பு இல்லாமல் இருந்தது. லஞ்ச ஊழல் அதிகமாக இல்லாத இரண்டு இலாக்காக்கள் அகில இந்தியாவிலேயே இருக்கிறதென்றால், அதில் ஒன்று தபால்-தந்தி இலாகாவும், அதற்கு அடுத்தபடியாக விவசாய இலாகாவும்தான். யுத்தத்திற்கு முன்னால் விவசாய இலாகாவானது அப்படி யிருந்தது. ஆனால், யுத்தம் வந்தவுடனே விவசாய இலாகாவுக்கு ஒரு கிராக்கி ஏற்பட்டு விட்டது. விவசாயத்திற்குத் தேவையான உப்பு, உரம், பிண்ணாக்குகள், இரும்புத் தகடு ஆகிய பொருள்களுக்கு கிராக்கி ஏற்பட்டிருந்த காரணத்தால், விவசாய இலாகாவினர் விவசாய அடிப்படையை மறந்து வியாபாரத்தில் இறங்கியிருந்தார்கள். அதனால் ஓரளவு பெயரும் கெட்டது.

"யுத்த காலத்தில் விவசாயத்திற்கு வேண்டிய கருவிகள், உர வகைகள் போன்றவைகள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யும் வேலை விவசாய இலாகாவினிடம் ஒப்படைக்கப்பட்டதன் காரணமாக விவசாய இலாகாவில் இருக்கும்படியான "டெமான்ஸ்ட்ரேட்டர்கள்" உண்மையிலேயே விவசாய விஷயங்களில் கவனம் செலுத்த முடியாமல் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தார்கள். இப்பொழுது அப்படிப்பட்ட வேலைகள் அவர்களிடமிருந்து தளர்த்தப்பட்டிருப்பதினால் விவசாய இலாகாவினர் இப்பொழுது விவசாய விஷயங்களை கவனிப்பதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது.

"விவசாய இலாகாவினர் செய்யும் ஆராய்ச்சியின் முடிவை அவ்வப்போது பொதுமக்களுக்கு சரியான முறையில் அறிவித்து, அப்படிப்பட்ட ஆராய்ச்சியினால் ஏற்படும் பலனை விவசாயிகள் அடையும்படியான முறையில் ஏற்பாடு செய்வது மிகவும் அவசியம். கனம் அமைச்சரவர்களின் திறமையினாலும், சுறுசுறுப்பினாலும் அந்த இலாகாவை வேகமாக முன்னேறும்படியான முறையிலே நடத்திக்கொண்டு வருகிறார்கள்.

"தஞ்சை ஜில்லாவில் நெல் அறுவடையானவுடனே குறுகிய காலப் பருத்தி விவசாயம் செய்து, அதன் மூலமாக தேசிய வருமானத்தை உயர்த்திய பெருமை பூராவும் நம் விவசாய டைரெக்டருக்கு உரியதாகும். அவர்களுக்கும் எனக்கும் சில விஷயங்களில் அபிப்பிராயபேதம் இருக்கிறது. அப்படிப்பட்ட அபிப்பிராயபேதங்களை அவர்களிடத்தில் சொன்னால் அதை மாற்றியமைத்துக்கொள்ளவும் அவர் பின்வாங்குவது இல்லை. ஆனால், செஸ்பேனியாவை நெல் பயிர் செய்வதற்கு உரமாகப் போடுவதில் எனக்கும் அவருக்கும் மிகுந்த அபிப்பிராயபேதம் இருக்கிறது; இன்றும் இருந்துகொண்டுதான் இருக்கிறது. செஸ்பேனியா வித்து உற்பத்திக்கே ஏற்பட்டது என்று சொன்னால் அதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால், நெல் உர உற்பத்திக்கு செஸ்பேனியாவை வயலில் வளர்க்கவேண்டும் என்பதை நான் இன்னும் அனுமதிக்கமுடியாது. எப்பொழுது நான் சொன்னேனோ அப்பொழுது விவசாய இலாகாவினர் நேரிலே வந்து விரிவாகப் பார்ப்பதற்குக்கூட அவர்கள் வருவதில்லை என்று வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். செஸ்பேனியா விஷயம் மிகவும் வெற்றிகரமாக இருக்குமென்று கவர்னர் பிரசங்கத்தில்கூட குறிப்பிடப்பட்டிருந்தது. அப்போதிருந்து நான் அதைப் பலமாக எதிர்த்தும் கூட நேரடியாக அவர்கள் என்னிடம் வந்து என்னைத் திருப்தி செய்திருக்கலாம்; நிரூபித்துக் காட்டப்படவில்லை என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

"செஸ்பேனியாவை வித்து உற்பத்திக்கே உபயோகிப்பதை நான் ஆதரிக்கிறேன். பசுந்தாள் உரத்திற்காக அதை வயலில் பயிருடன் பயிர் செய்வதையோ, அதை நிலத்தில் பயிருடன் உரமாகப் போட்டு உரமாகச் செய்வதையோ விவசாய மக்கள் ஆதரிப்பதாகச் சொல்லமுடியாது.

"கனம் அங்கத்தினர் ஸ்ரீ ராமலிங்கம் பேசும்போது உரத்தைப்பற்றி அதிகமாகச் சொன்னார்கள். நான் சொல்வது என்னவென்றால், நமது தேசம் விவசாய தேசம். ரசாயன உரத்தைக்கொண்டு பயிர் செய்யலாம் என்று நாம் நம்பியிருக்கக்கூடாது. கம்போஸ்ட் உரம் அதிகமாக உப

[Sri P. G. Karuthiruman] [8th March 1955

யோகிக்கப்படவேண்டும். மனிதர்களுடைய மல ஜலம் பாதுகாக்கப்பட்டு, ஆடு மாடுகளின் சாணம் நன்றாக சேர்க்கப்பட்டு, அவைகளைக்கொண்டு இயற்கை உரம் தயாரித்து, அவைகளைக்கொண்டு பூமியை வளப்படுத்தி, தானிய உற்பத்தியைப் பெருக்கவேண்டுமேயொழிய செயற்கை உரமாகிய ரசாயன உரத்தைப் போடுவது அவ்வளவு உகந்ததல்ல. ரசாயன உரம் போன்றவைகளை அதிகமாக உபயோகப்படுத்தி தானியங்களின் அளவை (quantity) பெருக்கிவிட்டோம். ஆனால், தானியங்களின் தரத்தை (quality) உயர்த்தவில்லை. தானியங்களின் தரம்தான் முக்கியமாக உயர வேண்டுமேயொழிய அளவைப் பெருக்கிக்கொண்டு போவதில் அதிக நன்மை கிடையாது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் quantity-ஐ அதிகம் செய்துவிட்டோம். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் quality-ஐ உயர்த்தவேண்டும். அதாவது உணவு சத்து அதிகமாகவுள்ள வகையில் (Nutritive value of the foodstuffs) உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வதில் கவனம் செலுத்துவதுதான் மிகவும் அவசியம். நாம் சாப்பிடும்படியான உணவானது நல்ல தன்மையுடையதாகவும், தரமுடையதாகவும், உணவுச் சத்துக்களெல்லாம் நிரம்ப உடையதாகவும் இருக்க வேண்டுமானால் இயற்கை உரங்களை உபயோகிப்பது அவசியம். இயற்கை உரங்களை பூமியில் போட்டுப் பயிர் செய்வதனால் பூமியின் வளம் குன்றாமல் இருப்பதோடுகூட, அந்த பூமியிலிருந்து நல்ல பூரணமான வளர்ச்சியடைந்த விளைபொருள்களை நாம் உற்பத்தி செய்யமுடியும்.

12-20 p.m. "அடுத்தபடியாக, விவசாய டிமான்ஸ்டிரேட்டர்களை எடுத்துக்கொண்டால், சர்க்காருடைய அன்றாடத் தபால்களுக்கு பதில் எழுதுவதிலேயே அவர்களது முக்காலவாசி நேரமும் வீணாகி விடுகிறது. கிராம மக்களிடத்தில் அதிகமாகப் பழகி விவசாய முறைகளை அவர்களுக்கு விளக்கிச் சொல்வதற்கு அவகாசம் இருப்பதில்லை. ஆகவே உத்தியோக பூர்வமான விஷயங்களைக் கவனிப்பதற்கு குமாஸ்தாக்களை ஏற்படுத்தி, இந்த விவசாய டிமான்ஸ்டிரேட்டர்கள் மாதத்திற்கு 26 நாட்களாவது கிராமப் பண்ணைகளுக்குச் சென்று, நேரிடையான முறையிலே விவசாயிகளுக்கு ஆலோசனை சொல்ல ஏற்பாடு செய்யவேண்டும்.

"விவசாயக் கல்லூரிகளில் படித்துவரும் மாணவர்கள், விவசாயிகளின் குடும்பத்திலிருந்து வராத காரணத்தால், அவர்களின் வேலைத்தரம் குறைந்திருக்கிறது. ஏதோ சர்க்கார் உத்தியோகம் கிடைத்துவிடுகிறது என்பதற்காக எல்லோரும் வந்துவிடுகிறார்கள். விவசாய சம்பந்தமான முறைகளை நேரிடையாகத் தெரிந்த பழக்கமுள்ளவர்கள் அதிகமாக இந்தக் கல்லூரிகளில் படிப்பதற்கு வசதியளித்து, அவர்கள் விவசாய இலாகாவில் நியமிக்கப்பட்டால் வேலைத்தரம் உயரும்.

"உற்பத்திப் புள்ளி விவரங்களை எடுத்துக்கொண்டால், விவசாயப் பண்ணைகளில் பொறுக்கு விதைகளை வைத்துக்கொண்டு ஒரு ஏக்கராவுக்கு 3,000 பவுண்டு வரையில்கூட உற்பத்தி செய்யமுடியவில்லை. ஆனால் அதே விதைகளைக்கொண்டு, சாதாரணக் குடியானவர்கள் 4,000 பவுண்டு வரையில் உற்பத்தி செய்யமுடிகிறது. ஏன் இந்த வித்தியாசம்? மிகவும் கஷ்டப்பட்டு உழுது வேலைசெய்தால் அதிகம் உற்பத்தி செய்யலாம் என்பதைத்தான் இது எடுத்துக்காட்டுகிறது.

"நோய் வந்ததற்குப் பின்னால்தான் இப்பொழுது கவனிக்கப்படுகிறது. நோய் வருவதற்கு முன்பே, அதைத்தடுக்க மருந்துகள் அவசியம். 'அக்கிரசான்' என்ற மருந்தை இதற்கு முன்பு இனாமாக சர்க்கார் கொடுத்துவந்தார்கள். ஆனால் இப்பொழுது பணம் வாங்குவதாகச் சொல்லப்படுகிறது. விவசாயத்தைப் பாதிக்கும்படியான நிலைமை ஏற்படாமல், மருந்துகளை இனாமாக விநியோகிப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்ய வேண்டும்.

"விவசாய இலாகாவில் அனுஷ்டிக்கப்பட்டுவரும் முறை இடத்திற்கு இடம் மாறிவருகிறது. சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள், தேசீய வளர்ச்சித் திட்டங்கள் நடைபெறும் இடங்களிலே வேலைபார்க்கும் விவ

8th March 1955] [Sri P. G. Karuthiruman]

சாய இலாகா சிப்பந்திகள் ரெவின்யூ டிபார்ட்மெண்டின் கண்காணிப்பில் இருந்து வருகிறார்கள். ஜில்லா விவசாய அதிகாரிக்கும் இவர்களுக்கும் எந்தவிதமான சம்பந்தமுமில்லை. இதனால் மக்களுக்கு மிகவும் கஷ்டம் ஏற்படுகிறது. ரெவின்யூ டிபார்ட்மெண்ட்தான் இந்த மாதிரி சமுதாய அபிவிருத்தித் திட்டங்களிலே முக்கியமான பங்கு எடுத்துக் கொண்டாலும், விவசாய இலாகாவைச் சேர்ந்த village guides, agricultural demonstrators இவர்களை ரெவின்யூ டிபார்ட்மெண்ட் கையில் ஒப்படைப்பதனால், சரியாக வேலை நடப்பதில்லை. இவர்களை விவசாய இலாக்காவின் கண்காணிப்பிலேயே விடுவது நலம். அந்த மாதிரிச் செய்யும்படி கனம் மந்திரி அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"கீழ்பவானித் திட்டத்தில் மீன் வளர்ப்பு பண்ணை வைத்து நடத்தி வருகிறார்கள். பிடிக்கும் மீன்களை அங்கேயுள்ள கிராமமக்களுக்கு விநியோகிப்பதில்லை. 100 அல்லது 200 பவுண்டு மீனை 50 அல்லது 60 மைல் தூரத்திற்கு பெட்ரோல் செலவழித்துக்கொண்டு சென்று விற்கிறார்கள். அங்கேயுள்ள கிராமமக்கள் மீனை வாங்கத் தயாராக இருந்தும், அதற்காக விண்ணப்பங்கள் போட்டும் கூட அதை 'Popularise' பண்ணவேண்டும் என்று ஒரு கலெக்டர் சொன்னதற்காக 100 பவுண்டு மீனை விற்பதற்கு 50 மைல் தூரம் பெட்ரோல் செலவழித்துக்கொண்டு போவதால் நஷ்டம் ஏற்படுகிறது. 500 பவுண்டு வரையில் கிராமமக்களே வாங்கத் தயாராக இருக்கிறார்கள். சுற்றுப்புற கிராமங்களிலே இந்த மீனை விநியோகம் செய்வதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

"கால்நடைகள் சம்பந்தப்பட்ட வரையில், பொலிக்காளைகளிடம் எவ்வளவு அக்கறை காட்டுகிறார்களோ, அதே அக்கறையை பசுமாடுகளிடத்திலும் காண்பிக்கவேண்டும். பசுமாடுகள் சினைக்காலத்தில் சரியாகப் பராமரிக்கப்பட்டால்தான் நல்ல கன்றுகளை ஈனும். இதற்காக சர்க்கார் ஏழைகளுக்கு மான்யமாக ஏதாவது பணம் கொடுத்து உதவி செய்யவேண்டும். கால்நடைகள்தான் விவசாயத்துக்கு முதுகெலும்பாக இருப்பதால், அவைகளை வளர்க்க சர்க்கார் பணம் கொடுத்து உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மானியத்தை பரிபூர்ணமாக ஆதரிக்கிறேன்."

SRI V. KRISHNASAMI PADAYACHI :—"கனம் விவசாய மந்திரி அவர்கள் கொண்டுவந்திருக்கும் விவசாய மான்யத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

"நம் நாட்டில் பெரும்பாலான மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டு அதையே நம்பியிருக்கிறார்கள். சிறு விவசாயிகள் அதிகம். மக்களுக்கு விவசாயத்தில் ஊக்கம் ஏற்படும்படி செய்யவேண்டும். 'விவசாயம், கால்நடைகள்' ஆகியவற்றின் அபிவிருத்தியை நவீன விஞ்ஞான முறையில் அமைத்திட அரசாங்கம் முயலும் என்று இந்திய அரசியல் சட்டத்தின் 48-வது ஷரத்து கூறுகிறது. அதன்படி விவசாய ஆராய்ச்சிக் கழகம் மூலம் சர்க்கார் நல்ல வேலை செய்து வந்தபோதிலும் அவைகள் எல்லாம் சிறிய விவசாயிகளுக்குப் பயன்படவில்லை. ஆராய்ச்சியின் முதல் நோக்கம், உற்பத்தியைப் பெருக்கி அதிகரித்துவரும் ஜனத்தொகையின் தேவையைப்பூர்த்தி செய்வதே.

"இக்கால விஞ்ஞானமுறையில் புதிய வகையைக் கையாண்டு உற்பத்தியை அதிகரிக்கச் செய்யவேண்டும். இயற்கையின் விதிப்படி நிலவளம் குறைந்து விளைவு குறைவதால் நல்ல பசுந்தாள் உரம் போன்றவைகளை உபயோகிப்பது நல்லது.

"முதலாவதாக, நல்ல பொறுக்கு விதைகள் விவசாயிகளுக்கு கிடைக்கும்படி செய்யவேண்டும். இரண்டாவதாக, மலிவான பசுந்தாள் உரம் கிராமமக்களுக்கு கிடைக்க வசதி செய்யவேண்டும். செயற்கை உரத்தைவிடப் பசுந்தாள் உரம் மிகவும் நல்லது. நிலவளம் குறைந்து விளைவுக் குறைவைத் தடுக்க உரம் அவசியம்.

[Sri V. Krishnasami Padayachi] [8th March 1955

"கால்நடைகள் விவசாயத்துக்கு மிகவும் இன்றியமையாதவை. அவைகளின் நோய்களை உடனுக்குடன் கவனித்து நோயைத் தீர்ப்பதற்கு கிராமங்களிலேயே வைத்திய வசதி ஏற்படுத்தவேண்டும்.

(Sri P. G. Karuthiruman in the **Chair.**)

"விவசாயிகளுக்கு வேண்டிய கருவிகள், இயந்திரங்கள் போன்றவை கடன் மூலமோ அல்லது குறைந்தபட்ச வாடகைக்கோ கிடைக்கச் செய்ய வேண்டும். பம்புசெட்டு முதலியவை கிடைப்பதில் காலதாமதம் ஏற்படாமல் செய்யவேண்டும். ரூ. 50 நிலவரி செலுத்துகின்ற சிறு விவசாயிகளுக்குக் கடன் கொடுத்து உதவவேண்டும்.

"விவசாயத்திற்கு மின்சார வசதி இன்றியமையாதது. பல கிராமங்களுக்கு மின்சார விஸ்தரிப்பு ஏற்பட்டால் உணவு உற்பத்தி அதிகரிக்கும். கூடியசீக்கிரம் மின்சார வசதியை அதிகரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

"நல்ல விளைச்சல் இருந்தாலும், எதிர்ப்பாராத எலிவெட்டு, பூச்சிகள் முதலியவைகளால் பயிர்கள் பாதிக்கப்படுகின்றன. அவைகளைத் தடுப்பதற்கு தேவையான மருந்துகளை விவசாய இலாக்கா கொடுக்கவேண்டும்.

"நல்ல உற்பத்தியும் விவசாய அபிவிருத்தியும் அதிகரிப்பதற்கு பண வசதி அவசியம் தேவை. ஆதலால் விவசாயிகளுக்கு தக்காவி போன்ற கடன்களை காலாகாலத்தில் கொடுத்து உதவவேண்டும். இப்பொழுது சரியாகக் கடன்கள் கொடுக்கப்படுவதில்லையென்று பல அங்கத்தினர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதை சர்க்கார் கவனிக்கவேண்டும்.

"விவசாய முன்னேற்றத்துக்கு நவீன முறைகளை மக்கள் உணர பிரசாரமும் விளம்பரமும் மிகவும் அவசியம். விவசாய இலாகாவுக்கும் மக்களுக்கும் நல்ல தொடர்பு இருக்கவேண்டும். மேழிச் செல்வம், கிராம ஊழியன் போன்ற பத்திரிகைகள் மூலம் விவசாயிகளுக்கு, விவசாயத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை எடுத்துச்சொல்லி பிரசாரம் செய்யவேண்டும். கிராமப் பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் மூலம் மக்களுக்குப் போதிக்க ஏற்பாடு செய்யலாம்.

"விவசாய ஆபீசர்கள் மாதத்திற்கு 20 நாட்களாவது கிராமங்களுக்குச் சென்று மக்களுடன் தொடர்புகொண்டு, அவர்கள் பழக்கத்தில் உள்ள முறைகளைத் தெரிந்துகொண்டு, விஞ்ஞான முறைகளைப்பற்றிச் சொல்லியும் சிறந்த முறைகளை பின்பற்றவும் செய்யவேண்டும்.

12-30 p.m. "இன்னும் பல இடங்களில் விவசாயம் செய்யப்படாமல் இருக்கும் தரிசு நிலங்களை கூட்டுறவுப் பண்ணையாக நடத்தினால் மக்களுக்கு பயனும், முன்னேற்றமும் அளிக்கமுடியும். மகசூல் போட்டி வைத்து உழவர்களுக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கலாம்.

"மீன் வளர்ப்பைப்பற்றி எடுத்துக்கொள்வோம். மீனானது இன்று ஏழை மக்களுக்கு மிகவும் சிறந்த சத்துள்ள உணவாக உபயோகப்படுகின்றது என்று உணவு ஆராய்ச்சி நிபுணர்கள் ஒப்புக்கொண்டார்கள். ஆனால் அவர்களுக்கு சரியான முறையில் வசதிகள் கொடுக்கப்படவில்லை என்று இந்தப் பக்கத்து அங்கத்தினர்களும் கண்டித்துப் பேசினார்கள். அது உண்மையே.

"என்னுடைய தொகுதியில் 2,000 மக்களுக்கு மேல் மீன் பிடிப்போர் கடற்கரைப் பகுதியிலும், உள்நாட்டிலும் வசிக்கின்றனர். அவர்கள் சாதாரணமாக தங்களுடைய உயிரையும் மதியாது, கடலில் சென்று கஷ்டப்பட்டு மீன் பிடித்து சப்ளை செய்து வருகின்றார்கள். அவர்களை யாரும் கவனிப்பதில்லை. அவர்களுக்கு வேண்டிய வசதியில்லாததால், மீன் பிடிக்கும் தொழிலை அபிவிருத்தி செய்யமுடியாது இருக்கின்றார்கள். அவர்களுக்கு நூல், கட்டுமரம் முதலியவை சௌகரியமாக கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். மேலும் அவர்கள் இந்தத் தொழிலை கூட்டுறவு முறையில் செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

8th March 1955] [Sri V. Krishnasami Padayachi]

"അടുത്തപടിയാക, മീൻ പിടിപ്പോർ ഇരുപ്പതുകു ഇടവസതി ഇല്ലാമൽ ഇരുക്കിറ്റർകൾ. ആകവേ അവർകളുക്കു കടൽകരയോരങ്കളിലുള്ള പുറം പോക്കു നിലങ്കളേ ഇണമാകക് കൊടുത്തു വസതി ചെയ്താൽ മീൻ വളർച്ചി നല്ല മുറയിൽ അപിവിരുത്തിയടൈയ മുടിയും. മേലും, പല സമയങ്കളിൽ പുയൽ കാറ്റിനുൽ അവർകൾ പാതിക്കപ്പട്ടു മികവും കഷ്ടമുറുകിൻറനർ. അന്ത നേരത്തിലേ അവർകളുടൈയ തൊഴിൽ പറിക്കപ്പട്ടു, ചാപ്പാട്ടിട്കുക്കൂട വഴിയില്ലാമൽ കഷ്ടപ്പടുകിൻറനർ. അന്തക് കാലങ്കളിലേ എല്ലാം അവർകളുക്കു ഉതവി ചെയ്യവേണ്ടും. ഇതുക്കും ചങ്കങ്കൾ ഏറ്പടുത്തി ഉതവി ചെയ്യവേണ്ടും. മേലും, അവർകൾ പിടിത്തുക്കൊണ്ടു വരും മീൻകളേപ് പതപ്പടുത്തി അതാവതു Cold storage-ൽ പോട്ടു, അവർകളുടൈയ വിയാപാര വളർച്ചിക്കു ഉതവി പുരിയവേണ്ടും.

"മീൻ പിടിപ്പവർകൾ തങ്കളുടൈയ കുഴന്തൈകളുക്കു ചരിയാനപടി പടിപ്പു വചതി ചെയ്തു കൊടുപ്പതുക്കു മുടിയാമൽ കഷ്ടപ്പടുകിൻറനർ. അപ്പടിക് കഷ്ടപ്പട്ടു പടിത്തവർകളും വേലൈയില്ലാമൽ തിണ്ടാടുകിൻറനർ. അപ്പടിപ്പട്ടവർകളുക്കു മീൻ ഇലാകാവിൽ വേലൈ തരുവാർകളാനുൽ, തങ്കളുടൈയ നേരടിയാന അനുപവങ്കളേക്കൊണ്ടു തിറമൈയുടൻ വേലൈ പാർപ്പാർകൾ. അതു മട്ടുമല്ല. അവർകളുടൈയ മുൻനേറ്റത്തൈക് കുറിത്തു ഒരു ആലോചനൈക് കുഴു ഏറ്പടുത്തി; അവർകളുടൈയ കഷ്ടങ്കളേപ് പോക്കി നിവാരണം അളിക്കവേണ്ടുമെൻറു കേട്ടുക്കൊൾകിൻറേൻ."

* SRI M. NARAYANAN NAMBIAR :—"മിസ്റ്റർ ഡെപ്യൂട്ടി സ്പീക്കർ, സാർ, ഈ രാജ്യത്തെ ഭൂരിഭാഗം ജനങ്ങളും കൃഷികൊണ്ടാണ് ജീവിക്കുന്നതു്. കൃഷി, പ്രത്യേകിച്ചും നെൽകൃഷി, ഇന്ന് ആദായകരമല്ലാത്ത ഒരു പ്രവൃത്തിയായിത്തീർന്നിരിക്കുകയാണ്. കരുമുളക്, നാളികേരം, അടയ്ക്ക മുതലായ കൃഷികളെ അപേക്ഷിച്ചു നെൽ കൃഷി തീരെ ആദായകരമല്ലാത്ത ഒരു ഏർപ്പാടായിത്തീർന്നിരിക്കുകയാണ്. നെൽകൃഷിയെ ആശ്രയിച്ചു ജീവിക്കുന്ന കൃഷിക്കാരുടെ വിഷമതകൾ ദൈനംദിനം വർദ്ധിച്ചുവരുന്നു. കടംവാങ്ങിയാണ് കൃഷി നടത്തേണ്ടിയിരിക്കുന്നതു്. ജന്മിക്കു കൊടുക്കേണ്ട വാരം വാങ്ങി കഴിച്ചാൽ കൃഷിക്കാരന് കിട്ടുന്നതു് വളരെ തുച്ഛമാണ്. കൊള്ളക്കടക്കാരെ ആശ്രയിച്ചാലേ അവർക്കു കടം കിട്ടൂ. പരസ്പരസഹായസംഘങ്ങളിൽനിന്നു കിട്ടുന്ന കടം മൂന്നു ശതമാനം മാത്രമാണ്. അതുപോലെ ഒരു മൂന്നു ശതമാനം ഗവർമ്മെണ്ടിൽ നിന്നും കിട്ടുന്നുണ്ട്. ഇങ്ങനെ കിട്ടുന്ന 6 ശതമാനം കഴിച്ചാൽ ബാക്കി 94 ശതമാനത്തിന്നും കൃഷിക്കാരൻ കൊള്ളപ്പലിശക്കാരായ പണമിടപാടുകാരെയാണ് ആശ്രയിക്കേണ്ടിയിരിക്കുന്നതു്. കൃഷിഡിപ്പാർട്ട്മെണ്ട് മുഖാന്തിരം കൃഷിക്കാർക്ക് കൂടുതൽ കടം കൊടുക്കാനുള്ള ഏർപ്പാടുണ്ടാക്കിയില്ലെങ്കിൽ കൃഷിക്കാരൻെറ കാര്യം ഇനിയും കൂടുതൽ ബുദ്ധിമുട്ടിലാകുന്നതാണ്.

12-35 p.m.

"ഇന്ന് ചില പരിഷ്കരിച്ച കൃഷിസമ്പ്രദായങ്ങളെല്ലാം നാട്ടിൽ പ്രചരിച്ചിട്ടുണ്ട് പക്ഷെ ആ പ്രചാരം തൃപ്തികരമാണെന്നു പറഞ്ഞുകൂട. നാം ആശിക്കുന്ന തരത്തിലുള്ള പ്രചാരം അതിന് ഇനിയും ഉണ്ടായിട്ടില്ല. പുതിയ കൃഷിസമ്പ്രദായങ്ങളെക്കുറിച്ചുള്ള ലഘുലേഖകളോ മററു പ്രചാരവേലകളോ ഗ്രാമപ്രദേശങ്ങളിൽ ഇനിയും എത്തിയിട്ടില്ല. പരിഷ്കരിച്ച വിത്തും വളങ്ങളുമെല്ലാം വന്നിട്ടുണ്ടെങ്കിലും ഗ്രാമീണർക്കു അവയെപ്പററി ശരിയായ അറിവില്ല. ഞങ്ങൾക്കു വല്ല അറിവും ഉണ്ടെങ്കിൽതന്നെയും അതു് പ്രദേശത്തിൽ വരുത്തണമെന്നുള്ള സാഹചര്യങ്ങളില്ല. പരിഷ്കരിച്ച കൃഷിസമ്പ്രദായങ്ങളെപ്പററി കൃഷിഡിപ്പാർട്ട്മെണ്ട് ഗ്രാമീണരുടെയിടയിൽ മതിയായ പ്രചാരവേല ചെയ്യുന്നില്ലെന്നു പറയുമ്പോൾ അതിനെ ഒരു കുററംപറച്ചിലായി ഗവർമ്മെണ്ട് കണക്കാക്കരുതു്. വസ്തുതകൾ ഇന്നവിധത്തിലാണെന്നു മനസ്സിലാക്കാൻവേണ്ടി മാത്രം പറയുന്നതാണ്. കൃഷിഡിപ്പാർട്ട്മെണ്ടിൽ മേസ്തിരിമാരും ഫീൽഡ്മാൻമാരും വളരെ കുറച്ചേയുള്ളു. അതുകൊണ്ടാണ് കൃഷിക്കാരുടെയിടയിൽ വേണ്ട പ്രചാരവേല നടത്തുന്നതിനും കൃഷിക്കാർക്ക് ആവശ്യമായ ഉപദേശങ്ങൾ നൽകുന്നതിനും കൃഷിഡിപ്പാർട്ട്മെണ്ടിനു് സാദ്ധ്യമല്ലാതിരിക്കുന്നതു്.

"കൃഷിയെക്കുറിച്ചു പറയുമ്പോൾ കന്നുകാലികളെപ്പററി ചിന്തിക്കാതിരിക്കാൻ നിവൃത്തിയില്ല. കന്നുകാലികളെ ആശ്രയിച്ചാണ് കൃഷി പ്രധാനമായും നിലകൊള്ളു

[Sri M. Narayanan Nambiar] [8th March 1955

ന്നത്. ഇന്നു നാട്ടിൽ പുല്ലിന്നു വലിയ ക്ഷാമമുണ്ട്. പുല്ല് കിട്ടാതെ കന്നുകാലികളെ പോററാൻ സാദ്ധ്യമല്ല. ഗ്രാമങ്ങളിൽ മേച്ചിൽസ്ഥലങ്ങൾ ഉണ്ടാക്കേണ്ടതു് ഇന്നു അടിയന്തിരമായ ഒരാവശ്യമായിത്തീർന്നിരിക്കുന്നു. മേച്ചിൽസ്ഥലങ്ങളില്ലാത്ത പ്രദേശങ്ങളിലെല്ലാം മേച്ചിൽസ്ഥലങ്ങളുണ്ടാക്കുന്നതിന്നു ഗവമ്മേണ്ടിന്നു ഒരു പദ്ധതി ഉണ്ടായിരിക്കേണ്ടതാണ്.

"കൃഷിക്കു ഏതെങ്കിലും തരത്തിലുള്ള രോഗബാധയുണ്ടായാൽ അതിന്റെ നിവാരണത്തിന്നായി കൃഷിഡിപ്പാർട്ടുമെൻറ് സത്വരമായ നടപടികൾ എടുത്തുകാണുന്നില്ല. രോഗത്തിന്റെ വിവരം ഡിപ്പാർട്ടുമെൻറിന്നു കിട്ടിക്കഴിഞ്ഞാൽ സ്ഥലത്തു പോയി അന്വേഷിക്കുന്നതിന്നു ഒരു മേസ്ത്രിയേയോ ഫീൽഡ്മേനെയോ അയക്കും. അതുതന്നെ പലപ്പോഴും വളരെ വൈകിട്ടാണ് ചെയ്യുന്നതു്. ആ സമയംകൊണ്ടു രോഗം എങ്ങും പടർന്നു പിടിച്ചുകഴിയും. പിന്നെയും വളരെ വൈകിയിട്ടായിരിക്കും നിവാരണനടപടികളെടുക്കുന്നതു്. രോഗവിവരം കിട്ടിക്കഴിഞ്ഞാൽ ഇങ്ങനെ കാലതാമസപ്പെടുത്താതെ അടിയന്തിരമായി നിവാരണനടപടികളെടുക്കണമെന്നു ഗവമ്മേണ്ട് ഡിപ്പാർട്ടുമെണ്ടിനു കർശനമായ ഉത്തരവയയ്ക്കണം.

"ഫിഷറി ഡിപ്പാർട്ടുമെൻറിനെക്കുറിച്ചും രണ്ടു വാക്കു പറയാനാഗ്രഹിക്കുന്നു. തെക്കൻ കർണ്ണാടകത്തിൽ മുക്കുവക്കുട്ടികൾക്കായി ബേയ്ക്കലിൽ ഒരു ഹൈസ്കൂൾ കഴിഞ്ഞുകൊല്ലം തുറന്നിട്ടുണ്ട്. അവിടെ ഇക്കൊല്ലം V-ാം ഫോറം തുറക്കുന്നതായിരിക്കും. ഗവമ്മേണ്ട് ഒരു നല്ല കാര്യമാണിതുകൊണ്ടു ചെയ്തിട്ടുള്ളതു്. അജാനൂർ ഗ്രാമത്തിൽ മത്സ്യത്തൊഴിലാളികളിൽപ്പെട്ട മുഗയർ എന്നൊരു സമുദായമുണ്ട്. അവരുടെ സൌകര്യത്തിന്നായി അവിടെ ഒരു സ്കൂൾ സ്ഥാപിക്കപ്പെടണമെന്നു അപേക്ഷിച്ചിട്ടുണ്ട്. ബഡ്ജററിൽ അതു ഉൾക്കൊള്ളിച്ചുകാണുന്നില്ല. എങ്കിലും ആണ്ടുമാസത്തിൽ പുതിയ സ്കൂളുകൾ തുറക്കുന്ന കൂട്ടത്തിൽ അവിടെയും ഒരു സ്കൂൾ തുറക്കാൻ ഗവമ്മേണ്ട് ശ്രദ്ധിക്കുമെന്നു ഞാൻ വിശ്വസിക്കുന്നു.

"മഴക്കാലങ്ങളിൽ മത്സ്യത്തൊഴിലാളികൾക്കു വളരെ ബുദ്ധിമുട്ടുണ്ട്. അപ്പോൾ മത്സ്യം പിടിക്കാൻ സാദ്ധ്യമല്ല. അക്കാലത്തു അവർക്കു മററെന്തെങ്കിലും ഉപതൊഴിൽ ചെയ്തു ജീവിക്കാനുള്ള സൌകര്യമുണ്ടാക്കിക്കൊടുക്കണം. അതിന്നും ഗവമ്മേണ്ട് ഒരു പദ്ധതി തയ്യാറാക്കേണ്ടതാണ്.

"കടൽതീരത്തു വളരെയധികം സ്ഥലം ഒഴിഞ്ഞുകിടപ്പുണ്ട്. അതു് മത്സ്യത്തൊഴിലാളികൾക്കു പതിച്ചുകൊടുത്താൽ അവർക്കു വലിയ രക്ഷയായിരിക്കും. ഈ സ്ഥലങ്ങളിൽ മത്സ്യത്തൊഴിലാളികൾ ഇന്നു ധാരാളമായി തെങ്ങിൻതൈ വച്ചുപിടിപ്പിച്ചിട്ടുണ്ട്. എങ്കിലും ആ സ്ഥലങ്ങളൊന്നും അവർക്കു പതിച്ചുകൊടുത്തിട്ടില്ല. ആ തെങ്ങുകൾ നട്ടുണ്ടാക്കിയ ഗുണങ്ങൾക്കതന്നെ അതിന്റെ ഫലം അനുഭവിക്കാനിടയാകത്തക്കവണ്ണം ആ സ്ഥലങ്ങൾ അവർക്കു പതിച്ചുകൊടുക്കുന്നതു് വെറും നീതി മാത്രമാണ്. അതു ചെയ്യുവാൻ ഗവമ്മേണ്ടിന്നു ദയവുണ്ടാകണമെന്നു അഭ്യർത്ഥിക്കുന്നു.

"മലബാറിലെ ഫിഷർമെൻസ് സ്കൂളിലെ കുട്ടികൾക്കു ഉച്ചഭക്ഷണത്തിന്നുള്ള ഏർപ്പാടു ചെയ്തിട്ടുണ്ടെന്നു അറിയുന്നു. മലബാറിനെ തൊട്ടുകിടക്കുന്ന സ്ഥലമാണ് കാസർഗോട്ട്. അവിടത്തെ മുക്കുവക്കുട്ടികളും സാമ്പത്തികമായി വളരെ പിന്നോക്കം നില്ക്കുന്നവരാണ്. മലബാറിലെ മുക്കുവരെ അപേക്ഷിച്ചു ഇവർക്കു യാതൊരു മെച്ചവുമില്ല. അവർക്കും ഉച്ചഭക്ഷണം കൊടുക്കണമെന്നു അപേക്ഷിച്ചിട്ട് ഗവമ്മേണ്ട് അതനുവദിച്ചുകൊടുത്തിട്ടില്ല ഇനിയെങ്കിലും ഗവമ്മേണ്ട് അതു അനുവദിക്കണമെന്നു അപേക്ഷിക്കുകൊള്ളുന്നു."

12-42 p.m. SRI K. S. ARDHANARESWARA GOUNDER :—"കനം സഭാദ്ധ്യക്ഷൻ അവർകളേ, കനം വിവസായ മന്ത്രിരി അവർകൾ കൊണ്ടുവന്നിരുക്കുമ്പടിയാന വിവസായ മാൻയത്തെ ആതരിത്തു സില വാർത്തൈകൾ കൂറ വിരുമ്പുകിറേൻ. എനക്കു മുൻ തഞ്ചാവൂരിലിരുന്തു വന്തിരുക്കും നണ്പർ ചുയംപ്രകാശം അവർകൾ വക്കീലാക ഇരുന്താലും വിവസായത്തൈപ്പററി നൻറുക എടുത്തു വിളക്കിനാർകൾ. അതുക്കു അടുത്തപടി പി. എസ്സി. പാസ് ചെയ്തിരുക്കുമ്പടിയാന ഒരു അങ്കത്തിനർ അവർകൾ പേചിനാർകൾ. നാൻ ഒരു ചിറിയ വിവചായി. അന്ത മുറൈയിലേ എൻനുടൈയ കിരാമത്തിലുള്ള അനുപവങ്കളൈക്കൊണ്ടു നാനും അതുപററി സില വാർത്തൈകളൈക്കൂറ വിരുമ്പുകിൻറേൻ.

8th March 1955] [Sri K. S. Ardhanareswara Gounder]

"நமது விவசாயிகளுக்கு, விவசாய இலாகாவானது உதவி செய்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை போதியதாக இல்லை. ஆனால் ஒவ்வொரு இலாகாவும் நல்ல முறையில் நடப்பதற்காக நமது வருவாயைக்கொண்டு ஒதுக்கப்பட்டுள்ள தொகையைப் பார்க்கும்போது இப்போது உள்ளதே அதிகம் என்றுகூட சொல்லலாம். விவசாயத்தை நல்ல முறையிலே நடத்த வேண்டுமானால், ஒவ்வொரு விவசாயக் குடிமகனும் ஆங்காங்குள்ள விவசாய இலாகாவிற்கு அடிக்கடி சென்று, அவர்களுடைய யோசனைகளைக் கேட்டுச் செய்தால் நல்ல முறையிலே பலன் கிடைக்கும். அதற்கு ஆங்காங்குள்ள ஹெட்குவார்ட்டர்களில் ஒரு ஆராய்ச்சி இலாகாவை ஏற்படுத்தி இருக்கிறார்கள். அங்கு ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகின்றது. ஆனால் அதைவிட ஆங்காங்கே கிராமங்களிலேயே ஒரு விவசாய மாதிரிப் பண்ணையை அமைத்து, அதன் பலாபலன்களை ஆராய்ச்சி செய்து, அந்த கிராமத்திலுள்ள சீதோஷ்ண நிலைக்குத் தகுந்தவாறு விதைகளை பொறுக்கி, அதன்படி பயிரிடுவதற்கு வசதி செய்தால் விவசாய மக்களுக்கு அதிக நன்மைகள் ஏற்படும். இதைப் பரிசீலனை செய்து பார்க்கவேண்டும். அதை விட்டுவிட்டு கோயம்புத்தூரிலே ஆராய்ச்சி செய்யப்பட்ட விதையைக் கொண்டுவந்து சேலத்திலே விதைத்து பயிர் செய்தால் சரியானபடி பலன் தருவதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இது விவசாய டைரெக்டர் அவர்களுக்குத் தெரிந்த விஷயம். ஆனால் சர்க்காருக்குப் புதிய மாதிரிப் பண்ணைகளை ஏற்படுத்துவதற்குப் பணமில்லை. அதற்கு ஒன்று செய்யலாம். அதற்கு அவ்வளவு பணம் தேவையில்லை. ரொம்பவும் தரிசாகக் கிடக்கக் கூடிய நிலங்களை விவசாயிகளிடம் கொடுத்து, அவர்களுக்கு விதைகளையும் கொடுத்து பயிரிடச் செய்து அதிலே வரக்கூடிய லாபத்தை அவர்கள் எடுத்துக்கொள்ளலாம் என்றும், வேண்டுமென்றால் ஒரு சிறு பங்கை சர்க்காருக்கும் செலுத்தவேண்டுமென்றும் ஏற்படுத்தினால், அவர்களுக்கும் வருமானம் கிடைக்கும். சர்க்கார் இந்தப் பிரச்னையையும் எளிதில் தீர்க்க முடியும். மேலும் ஆங்காங்குள்ள டிமான்ஸ்டிரேட்டர்கள் அவர்களுக்கு எந்த முறையில் பயிரிடவேண்டுமென்று எடுத்துச்சொல்வதற்கும், அதன்படி பயிரிட்டால் மிகவும் உதவியாக இருக்குமென்றும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இது சாத்தியமானதாகும்.

"எருவிடுதல் முக்கியமான விஷயமாகும். அதிலே நமது விவசாய இலாகா டைரக்டர் ஸ்ரீ சிவராமன் அவர்கள் செஸ்பேனியா விதையை நல்ல முறையில் பயிரிடுவதற்கு உதவியிருக்கிறார்கள். ஆனால் கிராமங்களிலே அவைகளை எப்படிப் பயன்படுத்துவது என்று தெரியாமல் விட்டுவிடுகிறார்கள். சேலம் ஜில்லாவையும், கோயம்புத்தூர் ஜில்லாவையும் எடுத்துக்கொண்டால் 3 போகம் செய்யக்கூடிய ஒவ்வொரு வயலிலும் 2 போகம்தான் செய்யவேண்டும். ஒரு போகம் பயிர் செய்யாது எருவுக்காக விட்டுவிடவேண்டும். அவ்வாறு செய்வதால் நல்ல பலன் கிடைக்கும். அதைவிட்டு வரப்பு ஓரங்களிலும், நடுவிலேயும் விதைத்தால், இரண்டுக்கும் ஒத்துவராமல் பலன் கிடைப்பதில்லை. அப்படியில்லாமல் ½ ஏகர், ¼ ஏகர் நிலத்திலே தனியாக விதைத்து அதைக் கொண்டு எருவிடுவதைக்காட்டிலும், ஒரு போகம் எருவிற்காகவே விட்டு, மற்ற இரண்டு போகங்களில் பயிர் செய்தால் நல்ல மகசூல் கிடைக்கும்.

"சீமை உரங்கள் இருக்கின்றன. கிளரிசீடியா போன்ற எருக்களை உபயோகித்துப் பயிர் செய்தால் நல்ல மகசூல் கிடைக்கும். ஆனால் அதற்கு நமது விவசாய இலாகாவானது சில வசதிகளை செய்து கொடுக்கவேண்டும். நல்ல முறையில் அதிக மகசூல் செய்யக்கூடியவர்களுக்கு போனஸ் கொடுப்பது போன்றவைகளை ஏற்படுத்தி உற்சாகப்படுத்தவேண்டும். ஆனால் அதற்கு நமது விவசாயிகளும் ஓரளவு ஒத்துழைக்கவேண்டும். ஆனால் நாம் எப்போதும் ஏழை விவசாயிகள் என்றுதான் சொல்லிக்கொண்டு வருகிறோம். ஆகவே நாமும் ஓரளவாவது அவர்களுடன் ஒத்துழைத்தால்தான் அவர்களுக்கும் உற்சாகமேற்பட்டு நன்மைகள் செய்யமுடியும்.

"லோயர் பவானி, மேட்டூர் அணைக்கட்டுகளால் நீர்ப்பாசன வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றது. அங்குள்ள நிலங்களின் அபிவிருத்

[Sri K. S. Ardhanareswara Gounder] [8th March 1955

திக்காக விவசாய இலாகாவால் புல்டோசர்ஸ் வசதி செய்து கொடுக்கப் பட்டுள்ளது. முன்பு புல்டோசர்கள் வசதியளிக்கப்பட்டுள்ள இடங்களுக்கு மணி ஒன்றுக்கு ரூ. 12 முதல் ரூ. 14 வரை வசூலிக்கப்பட்டு வந்தது. அது இப்போது திடீரென்று ரூ. 17-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அதாவது ஒரு மணிக்கு ரூ. 3 அதிகம். விவசாயிகளின் நன்மையை நன்கு யோசனை செய்து ரூ. 12-க்கு குறைத்து இன்னும் பல இடங்களில் இவ்வசதியைச் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"இப்போது இங்கு விவசாய இலாகாவின் மும்மூர்த்திகளும் அமர்ந் திருக்கின்றனர். இவர்களைக்கொண்டு அசெம்பிளி நேரம் தவிர விவசாய அபிவிருத்தியைப்பற்றி ஒரு வகுப்பு நடத்தினால் மிகவும் உபயோகமாக இருக்கும். இச்சபையில் பி.எஸ்சி. படித்தவர்களும், மற்றும் விவசாயத் துறையில் அனுபவமுள்ளவர்களும் இருக்கிறார்கள். அதற்காக நாங்கள் எவ்வித படியும் கேட்காமல், விவசாய அபிவிருத்தி நுணுக்கத்தை (Technic) அறிந்துகொள்ள வரத்தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். தவிர கிராமங்களிலே விவசாய அபி விருத்திக்காக ஒரு ஆலோசனை குழுக் Advisory Board) நியமித்தால் விவசாயம் நல்ல முறையில் நடக்கும். அதுவும் தவிர, விவசாய இலாகா வினர் ஒவ்வொரு வாரமும் சந்தைக்குச் சென்று, பொறுக்கு விதைகளைப் பற்றியும், அதைப் பயிரிடும் முறையையும் எடுத்துச் சொன்னால் மிகவும் உபயோகமாக இருக்கும்.

"நமது நாட்டிலே கால்நடை இலாகா ரொம்பவும் முக்கியமானது. ஆனால் அதன் ஆபீசுகள் நாட்டிலே ரொம்பக் குறைவு. குறைவாக இருப்ப தற்கு காரணம் அரசாங்கத்தினிடம் பணம் கிடையாது. ஆகவே அதிகமான ஆபீசுகளை ஏற்படுத்தாமல் வாரந்தோறும் சந்தைக்கு வருகிற இடத்திலே கால்நடைகளுக்கு சிகிச்சை செய்தால் மிகவும் சௌகர்யமாக இருக்கும்.

"அடுத்து இந்த முனிசிபாலிடிகளை எடுத்துக்கொண்டால், எருக்களை ரோடுகள் போடுவதற்காகத்தான் உபயோகித்து வருகின்றார்கள். இதை ஒவ்வொருவரும் பார்க்கின்றோம். ஒவ்வொரு முறையும் நான் வரும் போது செங்கற்பட்டு ஜில்லாவைப் பார்த்தால் மண் மிகவும் மோசமாக இருக்கின்றது. அதிகமான நிலங்கள் தரிசாகக் கிடக்கின்றன. அதை யெல்லாம் ஏழை விவசாயிகளுக்கு கொடுத்து இந்த பட்டணத் திலும், அதன் பக்கத்திலுமுள்ள இடங்களிலும் தினமும் சேருகின்ற குப்பைகளை அங்கு கொண்டுபோய் சேர்க்க சர்க்கார் முன்வந்தால், மிகவும் நல்ல முறையில் விவசாயம் அபிவிருத்தி அடையும்.

"நமது அரசாங்க மானிகைக்குள்ளாகவே ஒரு மாதிரிப் பண்ணையை ஏற்படுத்தினால், அது அங்கத்தினர்களுக்கு உற்சாக மூட்டும். என் னைப் போன்றவர்கள் அங்கு சென்று உற்சாகமாக வேலை செய்வார்கள். மேலும் இங்கு வரும்படியான அங்கத்தினர்களுக்கும் விவசாய அபிவிருத்தி செய்வதைப்பற்றி ஒரு எண்ணம் உண்டாகும். அதன் அவசியத்தைப்பற்றி நேரடியாகவும் எடுத்துக் கூறமுடியும். தவிர நண்பர் சுயம் பிரகாசம் கூறுவதுபோல், அதில் சாகுபடியாகக்கூடிய பொருள்களைக் கொண்டு மந்திரிகளுக்கும், சட்ட சபை மெம்பர்களுக்கும், அதிகாரி களுக்கும் நல்ல முறையில் உணவு செய்து கொடுக்கமுடியும் என்பதை தெரிவித்துக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்ளு கிறேன்."

SRI A. RATNAM :—"கனம் உதவி சபாநாயகர் அவர் களே, விவசாய இலாகா, மீன் இலாகா, கால்நடை இலாகா என்ற இம் மூன்று இலாகாக்களையும் எடுத்துக்கொண்டால் பெரிய உத்யோகஸ்தர்களி லிருந்து சிறிய உத்யோகஸ்தர்கள் வரை, விவசாயத்தைப்பற்றியோ அல் லது மீன்களைப்பற்றியோ அல்லது கால்நடைகளைப் பற்றியோ அனுபவ மில்லாதவர்களாகத்தான் இருக்கிறார்கள். மீனவர் வம்சத்திலோ அல்லது விவசாய வம்சத்திலோ அல்லது ஆயிரம் ஆண்டுகளாக கால்நடைகளை வைத்து அனுபவம் பெற்றவர்கள் வம்சத்திலோ யாருமே கிடையாது என்

8th March 1955] [Sri A. Ratnam]

பதைப் பார்க்கும்போது மிகவும் விசனிக்கத்தக்கதாகயிருக்கிறது. காரணம் வெடரினரி, மெடிகல், அக்ரிகல்ச்சரல் போன்ற காலேஜ்களில் அந்தந்த இனத்தவர்கள் படிப்பதற்கும் பயிற்சி பெறுவதற்கும் முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். அரசியல் சட்டங்கள், சர்க்காரின் நோக்கங்கள், அவர்கள் அளிக்கும் சலுகைகள் எல்லாம் இம்மாதிரி கல்லூரிகளில் 15 சத விகிதம் இடம் பிற்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கி வைத்திருப்பதாகச் சொல்கின்றன. ஆனால் இந்த இலாக்காக்களிலும், காலேஜ்களிலும் சம்பந்தப்பட்ட இனத்தவர்கள் படிக்க முடியாததற்கு காரணங்கள் பல இருக்கின்றன. படித்துப் பட்டம் பெற்ற பிறகு இந்த தொழிற்சாலைகளில் படிக்க வேண்டுமென்றால் அதற்கு வேண்டிய முன் பணமும், விடுதி சலுகையும் இல்லாத காரணத்தினால் வேறு உத்யோகத்தை எதிர்ப்பார்த்து உபயோகமற்றவர்களாக திரிந்து வருகிறார்கள். இதற்காக சர்க்கார் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

" மீன் இலாகாவை எடுத்துக்கொண்டால் மீனவர் வம்சத்தைச் சேர்ந்த ஒருவரும் ஒரு சிறிய வேலைக்கு கூட லாயக்கற்றவர்களாக இருக்கிறார்கள். பெரிய உத்யோகஸ்தர்களும் மற்ற ஆபீஸர்களும் மீனைப்பற்றி அறியாதவர்களாகவும், மீனை உண்ணாதவர்களாகவும் இருந்தாலும் சரி, இந்த இலாகாவில் இருந்துகொள்ளலாம். ஆனால் பியூன் வேலை, கூலி வேலை, மீன் பிடிக்கும் வேலை போன்ற வேலைகளில்கூட அனுமதிக்கப்படவில்லை இந்த சமூகத்தினர். அரசியல் சட்டத்தில் என்ன சொல்லியிருந்தபோதிலும் இந்த சமூகத்தினர் அதன் பலன்களை அனுபவிக்க முடியாமல் இருக்கிறார்கள். வெடரினெரி டிகிரி வாங்கியவர்கள் பெரிய உத்யோகத்தில் இருப்பதைப்பற்றி எனக்குக் கவலை கிடையாது. ஆனால் குறிப்பாக மீனவர் வம்சத்தினருக்கு சாதாரண சலுகைகள் கூட கொடுக்கப்படுவதில்லை. அவர்கள் எங்கே வசிக்கிறார்களென்றால், கடற்கரை யோரங்களிலும், ஆற்றங்கறையோரங்களிலும், கால்வாய் ஓரங்களிலும் வசிக்கிறார்கள். அவர்கள் குழந்தைகளுக்கு பாடசாலை கிடையாது. குடிதண்ணீர் வசதி கிடையாது. மணலைத் தோண்டித்தான் தண்ணீர் எடுத்துக்கொள்ளவேண்டும். மல ஜலம் கழிக்க சரியான சுகாதார வசதிகள் கிடையாது. ஆகையால் அவர்கள் நாளடைவில் நோய்வாய்ப்பட்டு நலிந்து மெலிந்து சாகக்கூடிய நிலைமையில் இருக்கிறார்கள். இந்த மீன் இலாகா, மீன் உற்பத்தி பெருகுவதற்காக மீனவர் குலத்தினருக்கு கோவாப்ரேடிவ் சொஸைடிகள் மூலம் கட்டுமரங்கள் கொடுத்தும், கடன் கொடுத்தும் இருக்கிறார்கள். ஆனால் சாதாரணமாக அவர்கள் மீன் பிடித்துக்கொண்டு வருவதில் ஒரு பகுதியை எடுத்துக்கொண்டு போகிறார்கள். ஒரு நாள் அல்லது இரண்டு மூன்று நாட்கள் கடலில் சென்று கஷ்டப்படுகின்றவர்களுக்கு ஒரு நாள் உணவிற்கு கூட கதி இல்லாத நிலைமை ஏற்படுகிறது. ஆகையால் மீனவர்களுக்கு கட்டு மரங்களையாவது அரசாங்கமே தருவித்து கொடுப்பதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

" விவசாய இலாக்காக்களில் புல்டோஸர்கள், பம்பு செட்டுகள், டிராக்டர்கள் முதலியவைகளைவைத்து இருக்கிறார்கள். சாதாரணமாக 5 ஏக்கருக்கு குறைவாக நிலம் வைத்துள்ள விவசாயிகளுக்கு சலுகை கொடுக்கவும், ஜப்பானிய முறைப்படி உற்பத்தியை அதிகரிக்க விவசாயக் கருவிகளை வாங்க ஒவ்வொரு பிளாக் டெவலப்மெண்ட் ஏரியாவிலும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருக்கின்றன. இப்பொழுது அனுமதிக்கப்பட்டு இருக்கின்ற பணத்தால் ஆயிரக்கணக்கான சிறிய விவசாயக்கருவிகள் வாங்க முடியும். ஆனால் பெரிய டிராக்டர்களும், புல்டோஸர்களையும் நூற்றுக்கணக்கில் வாங்கினால் அவைகள் பெரிய நிலச்சுவான்தாரர்களுக்கும், ஜமீன்தாரர்களுக்கும் கிடைக்குமே தவிர, சிறிய விவசாயிகளுக்கு கிடைக்காது. பெரிய நிலச்சுவான்தாரர்களுக்கு புல்டோஸர், டிராக்டர்கள், பம்பு செட்டுகள் வாங்குவதற்கு போதிய பண வசதியிருக்கிறது. ஆனால் 5 ஏக்கருக்கு குறைவாகவுள்ள விவசாயிகளுக்கு உதவி செய்யவேண்டுமென்றால் ஏர்கள் போன்ற உழவுக் கருவிகளை கொடுத்து உதவ வேண்டும். இவர்களுக்கு பம்பு செட்டுகளை கடனாக கொடுத்து அறுவடை காலங்களில்

[Sri A. Ratnam] [8th March 1955

வசூல் செய்துகொண்டால் அரசாங்கத்திற்கு, அதிக வருமானமும் வரும். விவசாயமும் பெருகும். கடந்த மூன்று ஆண்டுகளாக பல கோடிக்கணக்கான ரூபாய் செலவில் பெரிய அணைத்திட்டங்களும் கால்வாய்களும் வெட்டப்பட்டு இருக்கின்றன. இதனால் பெரிய பணக்காரர்கள் தான் தங்களுடைய நிலத்தில் புல்டோஸர், டிராக்டர்கள் முதலியவற்றை உபயோகித்து பலன் அடைந்து இருக்கிறார்கள். சிறிய நிலச்சுவான்தாரர்களுக்கு அரசாங்கம் என்ன செய்து இருக்கிறது என்று தெரியவில்லை.

"இரசாயன எருக்கள் தகுந்த காலத்தில் கிடைப்பதில்லை. அதனால் சிறிய விவசாயிகளுக்கு பலன் கிடைப்பதில்லை. தகுந்த காலத்தில் கிடைக்காமற் போனாலும் பெரிய நிலச்சுவான்தாரர்கள் அதை வாங்கி, அடுத்த ஆண்டுக்கு வைத்துக்கொள்கிறார்கள். அல்லது கள்ள மார்க்கெட்டில் விற்கிறார்கள். லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கும் வியாபாரிகளும் சமயத்தில் பல தில்லு முல்லுகள் செய்கிறார்கள். எனவே பாமரமக்களுக்கு அரசாங்கம் எவ்வளவு பணம் செலவழிக்கிறது, எப்படி நாடு முன்னேற்றமடைய பாடுபடுகிறார்கள் என்பது தெரியவில்லை. உதாரணமாக, நேஷனல் எக்ஸ்டன்ஷன் சர்விசை எடுத்துக்கொண்டால், ஏதோ சில கிராமங்களில் ஒரு கிராமத்தை எடுத்துக்கொண்டு அதிலே ஒரு ஏக்கர் நிலத்திற்கு எக்ஸ்பெரிமென்ட் செய்துகாட்டுகிறார்கள். இதனால் முழு பலன் கிடைப்பதாக தோன்றவில்லை.

"வில்லேஜ் கைட்களை எடுத்துக்கொண்டால் ஹரிஜன வகுப்பை சேர்ந்தவர்கள் அதிகபேர்கள் இல்லை. உதாரணமாக ஆத்தூரில் இரண்டு, மூன்று ஹரிஜன வில்லேஜ் கைட்கள் இருந்தார்கள். இவர்களுக்கு பொது இடங்களில் உணவு அருந்தக்கூடாது, தண்ணீர் அருந்தக்கூடாது என்று பல வித கஷ்டங்கள் ஏற்பட்டன. அவர்கள் அப்படி செய்தால் அவர்களுக்கு அளிக்கப்பட்ட தண்டனையாக ப்ளாக் டெவலப்மெண்ட் ஆபீசர் அவர்களை வேறு இடத்திற்கு மாற்றினார்கள். இதுமட்டுமல்ல. தென் ஆற்காடு மாவட்டத்தில் பண்ருட்டி தாலூகாவில் இப்பொழுதுதான் ஒரு ஹரிஜன், ப்ளாக் டெவலப்மெண்ட் ஆபீசராக இருக்கிறார். ஆனால் இதற்கு முன்பிருந்த ஆபீசர் ஒரு ஹரிஜன் மேஸ்திரிக்குத் தொல்லைகள் கொடுத்ததாக பல தகவல்கள் வந்திருக்கின்றன."

DEPUTY SPEAKER :—"The hon. Member's time is up."

1-01 p.m. SRI A. RATNAM :—"மழையில்லாத காரணத்தால் பயிர்களில் பூச்சி விழுகின்றன. அப்படி பூச்சிகள் விழுந்து பயிர்களை அறுத்துவிடுகின்றன. அந்தந்த காலத்தில் அந்தந்த இடங்களில் பூச்சி மருந்துகளை போடாத காரணத்தால் பூச்சிகள் வெகு விரைவில் பயிர்களை அழித்து விடுகின்றன. ஆகையினால் பூச்சி மருந்துகளை உபயோகப்படுத்தக்கூடிய பம்பு போன்ற கருவிகளை சர்க்கார் உடனடியாக கொடுத்து உதவவேண்டும். அநேக இடங்களில் பூச்சி மருந்துகளை தெளிக்காததினால் விவசாயிகள் நஷ்டம் அடைந்திருக்கிறார்கள். அதைப் போக்குவதற்காக சாதனங்களையும் கருவிகளையும் வரவழைத்து பயிர்களுக்கு மருந்து அடித்து பூச்சிகளை நீக்கவேண்டும் என்று ஆட்சியாளரவர்களை நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"கால்நடை இலாகாவைப்பற்றி சொல்லும்போது அனுபவத்தில் பார்க்கும்போது கால் நடை ஆஸ்பத்திரிகள் அதிகம் இல்லாத காரணத்தால் பல இடங்களில் கால் நடைகளுக்கு வைத்திய வசதி இல்லாமல் இருக்கின்றன. விவசாயிகளுடைய கால்நடைகளுக்கு இந்த ஆஸ்பத்திரிகள் அதிகமாக உபயோகப்படுவதில்லை. பொலிகாளைகளை (அதாவது ஸ்டட் புல்ஸ்) பஞ்சாயத்துகளுக்கு அனுப்பி பஞ்சாயத்துகளின் மூலமாக அவைகளை பாதுகாக்கவேண்டும். அதன் மூலம் விவசாயிகளுக்கு பலன் கிடைக்கும்படி செய்யவேண்டும். இப்பொழுது ஜமீந்தார்களுக்கு கொடுப்பதால் அவர்கள் அதை சரியாக பராமரிக்காமல் இருப்பதால் அவைகள் சரியாக வேலை செய்யவில்லை என்று சொல்லுகிறார்கள். அவைகளை ஹரிஜனங்களிடம் அனுப்புவது கிடையாது. கனம் மந்திரி அவர்கள் சொல்லும்போது பஞ்சாயத்துகளுக்குக் கொடுத்தால் பஞ்சாயத்து அவைகளை சரியாக கவனிக்கவில்லையே என்று சொன்னார்."

8th March 1955]

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" காலையில் நான் மலையாளத்தைப்பற்றி சொல்லவில்லை. ஜமீந்தார்கள் யார் இருக்கிறார்கள் என்று கனம் அங்கத்தினர் தயவு செய்து சொல்ல வேண்டும்."

SRI A. RATNAM :—" மலையாளத்தைப்பற்றி நான் குறிப்பிட்டு சொல்லவில்லை. தென்னாற்காட்டில் அப்படி நடந்திருக்கிறது. ஆயிரம் ரூபாய்க்கு வாங்கியும் அவர்களுக்குக் கொடுத்து அவைகள் பயன் கொடுக்கவில்லை. ஆகவே தனிப்பட்டவர்களுக்குக் கொடுத்தால் அவர்கள் அந்தக் காளைகளை சரியானபடி பராமரிப்பார்கள். பஞ்சாயத்துகளுக்குக் கொடுத்தால் அவர்கள் அவைகளை சரியானபடி கவனிப்பதற்கு வழியில்லை. அதனால் அவர்கள் மூலமாக தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்கவேண்டும். தனிப்பட்டவர்களிடம் கொடுத்தால் அவர்களிடம் இருக்கும் பல மாடுகளுடன் இவைகளையும் கவனிக்கமுடியும். அதனால் பஞ்சாயத்து மூலமாக அந்தக் காளைகளை கவனித்து வருவதற்குக் கொடுக்கவேண்டும். அதன் மூலம் விவசாயிகள் பயனடைவார்கள் என்று சொல்லிக்கொண்டு அதிக நேரம் இல்லாததால் இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்."

* SRI K. UPPI SAHIB :—" Mr. Deputy Speaker, after the food situation eased, the activity of the Agricultural Department has also been proceeding slowly. Not only the department but the agriculturists are also not having the same enthusiasm and eagerness to improve the condition of agriculture. Now, it is up to the department to change its methods of working. Simply to go about and ask the ryot to improve the methods of cultivation is not sufficient. For several years, artificial manure had been recommended and distributed to the ryots at a cheap price. Now, there is a feeling among the agriculturists that chemical manure is not good for agriculture. Those ryots who have been using ammonium sulphate for the last two or three years are now saying that ammonium sulphate is not good for agriculture. It somehow or other spoils the fertility of the land. There is some truth in this. The scientists tell us that after ammonium is exhausted, there is some acid matter left behind which does harm to the condition of the soil. Use of ammonium sulphate alone will spoil the condition of the soil. Therefore, a large quantity of green manure has to be used along with ammonium sulphate. The department is advocating that policy. But the poor, illiterate agriculturists do not understand that. What I suggest to the Government is this. It is not enough for the Demonstrators to go about and preach something to certain ryots. What the latter require is practical demonstration. So, in each taluk two or three agricultural demonstration farms should be established. I have been suggesting this on several occasions. I have been saying that some ryots should be persuaded to adopt improved methods of agriculture. The Government should guarantee that if the ryot loses, they will make good the losses. If scientific methods of agriculture are followed, the Government are certain that the production will increase. Therefore, the Government will not lose. It is only in this way that the Government can instil confidence in the ryots to adopt improved methods of agriculture. If one or two ryots in a taluk can show to the rest of the ryots that by adopting the improved methods of agriculture, production will be increased considerably, certainly others will follow suit.

[Sri K. Uppi Sahib] [8th March 1955

"Then, Sir, at present, the Demonstrators are practically of very little use to the people on account of the other routine office work they have to do. Most of their time is taken away in routine office work. They are the statisticians and they have to send in hundred and one reports every day to different heads of departments. So, much of their time is taken away in clerical and ministerial work. As a consequence, the ryots do not get their help in time.

"In Malabar the number of pumpsets is inadequate. Applications for pumpsets have to be put in long before they will be required. The cultivators have also to deposit in advance a sum of Rs. 50. Even if the ryots do not get the pumpsets in time or do not get them quickly at all afterwards, this deposit amount is not returned to them. To get back this deposit sometimes a ryot has to spend after a year as much as Rs. 25. Even then he gets back the deposit amount. A sum of Rs. 50 is a big amount for a poor ryot. Therefore, the Government should make arrangements to expedite the refund of the deposit amounts immediately after the period is over."

DEPUTY SPEAKER :—"The hon. Member has got only two minutes more."

1-10 p.m. SRI K. UPPI SAHIB :—"I understand that the Agricultural Demonstrator of Perintalmanna taluk is to be removed. The ryots in that area are very much panick stricken as a result of the proposal of the Government to shift the Agricultural Demonstrator from Perintalmanna. I do not know the reasons why the Government want to remove him from the taluk headquarters and centre of the taluk.

"Again, Sir, with regard to the admission of students belonging to minorities in the Veterinary College, I wish to point out that very few members belonging to minorities get admission. I request the Government to look into this matter also.

"The condition of fishermen living in the West Coast area is very miserable especially during the rainy season. The Government should take steps immediately to see that their plight is redressed. During the major portion of the year, these people spend their time fishing in the sea and it has been repeatedly brought to the notice of the Government that their condition during the rainy season is very miserable and that the Government should take some steps to see that these people do not suffer. I hope the Government will do something for them."

*SRI S. RAMASAMI NAIDU :—"கனம் உதவி சபாநாயகர் அவர்களே, எல்லோருக்கும் பசி அதிகமாக இருக்கும் இந்த நேரத்தில் உலகத்தில் இருக்கும் பசியை நாங்கள் எல்லோரும் சேர்ந்து தீர்த்து விட்டோம் என்று விவசாய மக்கள் சார்பாக சொல்லிக்கொள்ள நான் மிக்க பெருமைப்படுகிறேன். இந் நாட்டிலே ஐந்தாண்டு திட்டத்திலே அமைக்கப்பட்ட பெரிய அணைக்கட்டுகளினாலும் நமது விவசாய மந்திரி அவர்கள், முன்பு மந்திரியாக இருந்த காலத்திலே அமைத்த பலசிறு நீர்த்

8th March 1955] [Sri S. Ramasami Naidu]

தேக்கங்களாலும், கொடுக்கப்பட்ட பணத்தைக் கொண்டு வெட்டப்பட்ட கிணறுகள் மூலமாக நாட்டில் உணவு உற்பத்தியை அதிகப்படுத்தியது மட்டுமல்லாமல் வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யக் கூடிய அளவுக்கு உணவு உற்பத்தி செய்து விட்டோம் என்று விவசாய மக்களாகிய நாங்கள் பெருமை அடைகிறோம். ஆனால் பெருமை அடைகிற இந்த நேரத்திலே விவசாய மக்களுக்குள்ள சில குறைகளையும் நான் இங்கு சொல்ல வேண்டியது அவசியமாக இருக்கிறது.

"சர்க்கார் பல துறைகளிலும் விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களை நீக்குவதற்கு பிரயத்தனப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்றாலும் இருக்கும் கஷ்டங்கள் பலவாகி அக் கஷ்டங்களை நீக்குவது மிகவும் சிரமமாகி அவர்கள் எடுத்துக்கொள்ளும் முயற்சியினால் விவசாய மக்கள் அதிகமாக துரிதமாக பலன் அடைய முடியாமலிருக்கிறார்கள் என்பதை நாம் எல்லோரும் அறிகிறோம். அதற்காக சர்க்கார் அளித்து வரும் சலுகைகளைப்பற்றி குறை கூற நான் முன் வரவில்லை. நான் அதைப் பாராட்டுகிறேன்.

" விவசாய மக்கள் இன்றைக்கு உணவு உற்பத்தி செய்வதிலும் உடைக்கு வேண்டிய பஞ்சு உற்பத்தி செய்வதிலும் வெகு தீவிரமாக முனைந்து இன்றைக்கு அதிகப்படியாக வெளி நாடுகளுக்கு உணவும், பஞ்சும் ஏற்றுமதி செய்யக் கூடிய அளவில் இருக்கிறார்கள் என்றாலும் இன்றைக்கு அவர்களுடைய நிலைமை மிகவும் பரிதாபகரமாக இருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் உணவு தானியங்கள் அதிகமாக உற்பத்தியாகி விட்டதனால் இன்றைக்கு தானியங்களின் விலை குறைந்து வருகிறது. பருத்தி விலையும் அப்படியேதான் இருக்கிறது. உணவு தானிய விலையை ஸ்திரப்படுத்த சர்க்கார் முயற்சி செய்யும் என்று நமது நிதி மந்திரி அவர்கள் சொன்னதைக் கேட்டு நாங்கள் சந்தோஷப்படுகிறோம். என்றாலும் எந்த வகையில் நிவர்த்தி அளிப்பார்கள், இந்த வருஷத்திலேயே அந்த நிவர்த்தி கிடைக்குமா என்று எண்ண வேண்டியது மிகவும் அவசியமாக இருக்கிறது. ஏனென்றால் இப்பொழுது இருக்கும் விவசாயிகளுடைய நிலை 1938-ல் இருந்ததை விட மிகவும் மோசமாக இருக்கிறது. விவசாயிகளாகிய நாங்கள் எல்லோரும் சென்ற வருஷமும் அதற்கு முந்திய வருஷமும் கிடைத்த வருமானத்தை வைத்துக்கொண்டு எங்கள் வாழ்க்கைத் தரத்தை நொடியாது வைத்திருந்தோம். ஆனால் திடீரென்று விலை சரிந்ததன் காரணமாக உணவு தானியங்களின் விலைகள் குறைந்து விட்டதன் காரணமாக, பருத்தி விலை குறைந்து விட்டது, கடலை விலை குறைந்து விட்டது, கரும்பின் விலை குறைந்து விட்டது, எல்லா தானியத்தின் விலைகளும் குறைந்து விட்டன. ஆகையால் நாங்கள் போட்ட திட்டப்படி எங்களுடைய வாழ்க்கையை சரிக்கட்ட சக்தியில்லாதவர்களாக இருக்கிறோம். சரிக்கட்டுவதற்கான முயற்சி எங்களால் எதுவும் எடுத்துக்கொள்ள முடியவில்லை, என்று நாங்கள் சொல்லிக்கொள்ள விரும்புகிறோம். ஏனென்றால் எல்லா வியாபாரமும் எல்லா தொழில்களும் நல்ல பணம் படைத்தவர்களுடைய கையில் இருப்பதால் ஐக்கிய சங்க இயக்கமும் தனிப்பட்ட விவசாயிகள் கூட்டு முயற்சியாலும் எதுவும் செய்து கொள்ள சக்தியற்றவர்களாக இருக்கிறார்கள். சர்க்கார் அவர்களுக்கு ஏதாகிலும் சலுகைகள் செய்து கொடுத்தால் இந்த விலையை சரிக்கட்ட முடியும்.

" விவசாயிகளுக்குக் கொடுத்துக்கொண்டு வரும் கூலியானது எந்த வகையிலும் குறையவில்லை. ஆனால் அவர்கள் வாங்கும் சரக்குகளின் விலையோ பழைய விலையையே அனுசரித்திருக்கிறது. பருத்தி உற்பத்தி அதிகரித்திருந்தாலும் அதனுடைய விலை குறைந்ததாக இல்லை. விவசாயிகளுக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய விலைகளை வாங்கித் தர வேண்டிய பொறுப்பும் கடமையும் சர்க்காருடையதாகும் என்று சொல்லத் தேவையில்லை.

" விவசாயிகளிடமுள்ள உபரி தானியங்களை சர்க்கார் அதிக விலை கொடுத்து வாங்கி வைக்க வேண்டும். அதிக செலவு காரணமாகவும்,

[Sri S. Ramasami Naidu] [8th March 1955

அவசரமாக செய்ய வேண்டிய செலவுகள் காரணமாகவும், அதிகமாக தானியங்களை மீதம் வைத்துக்கொண்டிருந்ததாலும் உபயோகமில்லாமல் விவசாயிகளுக்கு கூலியை பணமாக கொடுக்க வேண்டியதன் காரணமாகவும் தானியங்களை உடனடியாக விற்க வேண்டிய நிர்ப்பந்தம் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே சர்க்கார் முன் நின்று இன்றைக்கு விவசாயிகள் விற்கும் தானியங்களை இன்ன விலைக்கு வாங்க வேண்டும் என்று கட்டுப்பாடு செய்தோ அல்லது சர்க்காரே வாங்கி வைத்து சேமித்து அடுத்துள்ள நாடுகளுக்கு அனுப்பவோ ஏற்பாடு செய்ய வேண்டும்.

" அம்மாதிரியே பருத்தி விலைக்கும் நூல் விலைக்கும் உள்ள தாரதம்மியத்தைக் கொண்டு இன்ன விலைக்குத்தான் பருத்தி வாங்க வேண்டும் என்ற நியதியையும் ஏற்படுத்த வேண்டும். நூல் விலையையும் குறைக்க வேண்டும். இரண்டும் இல்லாமல் விவசாயிகள் உற்பத்தி செய்யும் சரக்குகளின் விலை குறைந்திருக்கும்போது அவர்கள் வாங்கக் கூடிய ஆடையின் விலையை அதிகரித்துக்கொண்டு போனால் விவசாயிகளுடைய கஷ்டம் எவ்வளவு இருக்கும், மனம் கசப்பு அவர்களுக்கு எவ்வளவு இருக்கும் என்று நான் சொல்லத் தேவையில்லை.

" அதே போல் ஒவ்வொரு சரக்கின் உற்பத்தி விலையும் திரும்ப வாங்கும் நிலையில் விலையை சரிக்கட்டி விவசாயிகளுக்கு ஆதாயம் கிடைக்கும்படி செய்ய வேண்டும். அந்த முயற்சியில் சர்க்கார் ஈடுபட வில்லையானால் இந்த வருஷத்தில் விவசாயிகள் கடன் பட்டுவிடுவார்கள். கடன் பட்டு விடுவார்கள் என்பது மட்டும் அல்ல. அவர்களுக்கு இன்று இருக்கும் நிலைமையில் கடன் கொடுக்க யாரும் முன் வராமல் மிகவும் கஷ்டப்படுவார்கள். செலவை சரிக்கட்ட முடியாத நிலையில் படிக்கும் குழந்தைகளையும் பள்ளிக்கூடத்திற்குப் போக வேண்டாம் என்று சொல்லி நிறுத்திக் கொள்வார்கள். விவசாயத்தில் ஈடுபடுவதை குறைத்துக் கொள்ளவும் முற்படுவார்கள் என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அடுத்த வருஷத்தில் இவ்வளவு அமோகமாக உணவு உற்பத்தியையும் பருத்தி உற்பத்தியையும் எதிர் பார்க்க முடியாது என்பதையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

" இன்றைக்கு விவசாயி அதிகமாக உணவு உற்பத்தி செய்வதற்குக் காரணம் சர்க்கார் கொடுத்திருக்கும் சலுகைகள், நிறைவேற்றி இருக்கும் அணைத்திட்டங்கள், சிறு நீர்த்தேக்கங்கள், கிணறுகள் வெட்டுவதற்குக் கொடுத்த மான்யங்கள், இஞ்சின்கள் வாங்குவதற்கு சர்க்கார் கொடுத்த பண உதவி, மற்றும் விவசாய இலாகாவும், மற்ற இலாகாக்களும் கொடுத்த உதவியினாலும் விவசாயிகள் அதிகமான பலன் அடைந்திருக்கிறார்கள் என்று நான் சொல்லுவேன். எப்படி நிலத்திற்கு உரமிடுவது, எப்படி விதை விதைப்பது, எப்படி நாற்று பாவுவது ஆகிய விஷயங்களில் விவசாய இலாகா விவசாயிகளுக்கு கற்பித்துக்கொடுக்கிறார்கள். அது மாத்திரம் அல்ல, விவசாய இலாகாக்கள் இன்றைக்கு மனிதர்களுடன் மனிதர்களாகப் பழகுகிறார்கள் என்று சொல்ல நான் சந்தோஷப்படுகிறேன். 'Human interest' என்பதற்கு சரியான தமிழ்ப்பதம் இல்லாதலால் இன்றைக்கு அவர்கள் மனிதர்களுடன் மனிதர்களாகப் பழகுகிறார்கள் என்று நான் குறிப்பிட்டேன்.

" அவர்கள் விவசாயிகளிடையே நன்றாகப் பழகி விவசாய மக்களிடையே ஒன்றி யிருந்து அவர்களுடைய தேவைகளை நல்ல விதமாக பூர்த்தி செய்கிறார்கள். சர்க்கார் கொடுத்திருக்கும் உயர்ந்த ரக விதைகளைக் கொண்டு அமோகமாக உற்பத்தி செய்ய முடிகிறது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தனிப்பட்ட ஆராய்ச்சியினால் அதிகமாக பயனடைய முடியவில்லை என்றாலும் கூட இன்றைக்கு விவசாய இலாகா முயற்சியினால் நெல், கரும்பு, கடலை, ஆகிய எல்லா தானிய வகைகளிலும் விவசாய இலாகா ஆராய்ச்சியின் மூலமாக கிடைத்த விதையினால் விவசாய மக்களாகிய நாங்கள் நல்ல பலனை அடைந்து வருகிறோம் என்று சொல்லி சந்தோஷப்படுகிறேன். அவர்களுடைய முயற்சிகளை நாங்கள் பாராட்டுகிறோம். விவசாய இலாகா இன்னும் சற்று நல்ல முறையில் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

8th March 1955] [Sri S. Ramasami Naidu]

"அங்கங்குள்ள மண்ணின் வளத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்து விவசாயிகளுக்கு மண்ணின் தரத்தைப்பற்றியும், இன்ன மண்ணில் இன்ன குறை இருக்கிறது அதை எப்படி நிவர்த்தி செய்யவேண்டும், எந்த இடத்தில் என்ன பயிர் செய்யவேண்டும், எந்த மண்ணில் எந்த சாதனங்களை உபயோகப்படுத்த வேண்டும் என்று விவசாயிகளுக்கு அவ்வப்போது யோசனைகள் சொல்லவேண்டும். ஒவ்வொரு தாலுகாவிலும் ஒரு சோதனை சாலையை ஏற்படுத்தி யோசனைகளைச் சொல்ல வேண்டும். இப்பொழுது கோயம்பத்தூருக்கு அனுப்பிதான் மண்ணின் தரத்தை தெரிந்து கொள்ள வேண்டியதாக இருக்கிறது. அதனால் அங்கங்கே சோதனை சாலைகளை அமைப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

"விவசாய இலாகாவுடன் இன்றைக்கு விவசாயத்தில் ஈடுபட்ட நாங்கள் ஒண்டி நிற்க பல துறைகளிலும் அவர்கள் எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். 1-21 p.m.

"'இரு தாயின் சேய்' என்று முன் காலத்தில் விவசாயியைப்பற்றி சொல்வார்கள். யாரிடம் சொல்வது என்று எங்கி நிற்கும் விவசாயி இன்று 'பல தாயின் சேய்' ஆக இருக்கிறான் என்று தான் சொல்ல வேண்டும். யாரிடம் செல்வது என்று தெரியாமல் விவசாயி இன்று பரிதாபமான நிலையில் இருக்கிறான். டிராக்டர்கள் வேண்டுமென்றால் விவசாய இலாகாவுக்கும், கிணறு வெட்டுவதற்குச் சோதனைக்குழி போட வேண்டுமென்றால் 'இண்டஸ்ட்ரீஸ்' இலாகாவுக்கும், இன்னும் அவனது பலவிதமான தேவைகளுக்கு பல இலாகாக்களுக்குப் போய் தன்னுடைய தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டியிருக்கிறது. இது விஷயத்தில் சர்க்கார் ஏதாவது ஒரு நிர்ணயம் செய்யவேண்டும். விவசாயியின் தேவைகள் எந்த இலாகாவினால் பூர்த்தி செய்யப்பட வேண்டுமோ அந்தந்த இலாகாக்களுக்கு விவசாயியே போய் அலைந்து கொண்டிருக்காமல், கூடுமானவரை விவசாய இலாகாவின்மூலமாகவே எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்துக்கொள்ளும்படியான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும்.

"நடை முறையிலே உள்ள குறைகளைச் சொல்லி வீண் காலம் கடத்தாமல் ஒன்றிரண்டு விஷயங்களை மட்டும் குறிப்பிடுகிறேன். உரம் விஷயமாக பல அங்கத்தினர்கள் ஏற்கனவே குறிப்பிட்டுவிட்டார்கள். அதைப் பற்றி நான் மேலும் சொல்லிக்கொண்டிருக்க விரும்பவில்லை.

"விவசாயத்திற்கு மிகவும் அத்தியாவசியமானவை மிருகங்கள். ஒவ்வொரு பிர்க்காவிலும் ஒரு மிருக வைத்தியசாலையையாவது ஏற்படுத்துவது நல்லது. அவ்வாறு சர்க்கார் செய்து கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். ஒரு தாலூகாவில் ஒரு இடத்திலோ இரண்டு இடத்திலோ இருக்கிறது. மிகவும் அவசியமான மிருக வைத்தியசாலைகள் ஒவ்வொரு பிர்க்காவிலும் ஒன்றாவது இருக்க வேண்டும். கூடிய சீக்கிரம் ஒவ்வொரு பிர்க்காவுக்கும் அபிவிருத்தித் திட்டங்கள் ஏற்படும் காலத்தில் ஒவ்வொரு பிர்க்காவுக்கும் ஒரு விவசாய டிமான்ஸ்டிரேட்டரும், ஒரு கால் நடை அதிகாரியும் கிடைப்பார்கள் என்ற எண்ணம் இருப்பதால் ஒரு மிருக வைத்தியசாலையை அவசியமாக ஏற்படுத்தவேண்டும் 'டெவலப்மெண்ட்' திட்டத்தில் மூன்று, நான்கு பிர்க்காக்களைச் சேர்ப்பதற்குப் பதிலாக ஒவ்வொரு பிர்க்காவுக்கும் ஒன்று இருக்கவேண்டும் என்பது என் ஆசை. அதைப் பூர்த்திசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

"பல விஷயங்களைப்பற்றி பேசவேண்டுமென்ற ஆசை இருந்தாலுங்கூட் நேரம் இல்லை என்று சொல்வதால் விஷயங்களைக் குறைத்துக்கொள்கிறேன். விவசாயிகள் நெல் பயிர் செய்வதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. பசுந்தழைகள் காடுகளில் கிடைப்பதில்லை. பல புது முறைகள் விவசாய இலாகாவால் எங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன. முக்கியமாக செஸ்பேனியாவை வரப்புகளில் நட்டு பசுந்தாள் உரம் தயாரித்துக்

[Sri S. Ramasami Naidu] [8th March 1955

கொள்ளலாம் என்பது. செஸ்பேனியாவை வரப்புகளில் நட்டுப் பயிர் செய்வதால் நெற் பயிர்களுக்குக் கெடுதல் ஏற்படும் என்று கனம் அங்கத்தினர் ஸ்ரீ பி. ஜி. கருத்திருமன் சொல்லுகிறார். 'நடைமுறையில் கெடுதல் இல்லை' என்று விவசாய இலாகாவினர் சொல்லுகிறார்கள். இதை நன்றாகப் பரிசீலனை செய்து முடிவு செய்து மக்களுக்குத் திருப்தி உண்டாகும்படியாகச் செய்யவேண்டும். ஏனென்றால், சட்டசபையில் பேசுகிற பேச்சுகள் பத்திரிகையில் வருகின்றன. பத்திரிகைகளில் வரும் விஷயங்களைக் கண்டு விவசாயிகளுக்கு சந்தேகம் உண்டாகும். ஸ்ரீ கருத்திருமன் திரும்பத் திரும்ப அவருடைய அபிப்பிராயத்தை வற்புறுத்துவதால், அவர் சொல்வதில் 'ஏதோ இருக்கலாம்' என்று கூட எனக்குப் படுகிறது. அதை ஆராய்ச்சியின் மூலமாக நல்ல முறையிலே தெளிவு படுத்தவேண்டும். விவசாய இலாகாவினர் இதைப்பற்றி ஆராய்ச்சி செய்வதற்கு முயற்சி எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"விவசாய இலாகாவின் சாதனைகளினாலே இன்றைக்கு 200, 300 ஏக்கராக்கள் தரிசாகக் கிடந்த நிலங்கள் டிராக்டர் மூலமாக உழுதிருப்பதை என் ஊர்ப் பக்கத்தில் 'பிளாக் டெவலப்மெண்ட்' பகுதியில் நான் பார்த்திருக்கிறேன். ஏழை பிற்பட்ட மக்கள் 200 ஏக்கரா நிலங்களை பத்து வருஷ காலமாக உழுது நல்ல முறையில் சாகுபடி செய்திருக்கிறார்கள். பல நன்மைகளை விவசாய இலாகா இன்றைக்குச் செய்து கொண்டிருக்கிறது. மான்யங்களை சர்க்கார் ஏராளமாகக் கொடுத்து உதவிசெய்ய வேண்டும். நிதி மந்திரி அவர்கள் இப்பொழுது இங்கு இல்லாவிட்டாலுங்கூட விவசாய மந்திரி விவசாய அபிவிருத்திக்குக் கேட்கும் சகல மான்யங்களையும் தாராளமாகக் கொடுத்து உதவ வேண்டுமென்று நிதி மந்திரி அவர்களைக் கேட்டுக்கொண்டு விவசாய இலாகாவும் விவசாய மந்திரி அவர்களும் செய்துள்ள சாதனைகளைப் பாராட்டி, இன்னும் மக்களுக்கு அதிகமாக உதவி செய்யும்படி ஒரு வேண்டுகோள் விடுத்துக் கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்ளுகிறேன்."

1-25 p.m. DEPUTY SPEAKER :—"The House will sit till 1-35 p.m. The hon. Member Sri Kanaran will speak now."

*SRI C. H. KANARAN :—"மிஸ்டர் டெபுடி ஸ்பீகர், ஸர், ஃபிஷரீஸ் டிபார்ட்மெண்டினைப்பற்றி சிலது சம்ஸாரிக்கவானாண்டுகேட்கிறேன். கிஷியை ஸம்பந்தியிலு இவிடெ ஧ாரளம் பேர் சம்ஸாரிச்சுகழிஞ்ஞிட்டுண்டு. அதுகொண்டாணு ஃபிஷரீஸினெக்குறிச்சு மாத்ரம் சம்ஸாரிக்கான் ஞான் உத்தேசிக்குன்னது. கவர்ன்மெண்டு இதினுவேண்டி செலவுசெய்யுன்னது 16 லக்ஷத்தில் சிலவானம் உருப்பிக மாத்ரமாணு. வாஸ்தவத்தில் கிஷி கழிஞ்ஞால் ஏறவும் ப்ரதானப்பெட்ட ஒரு வ்யவஸாயமாணு மத்ஸ்ய வ்யவஸாயம். ஈ ராஜ்யத்திலெ ப்ரதானப்பெட்ட ஭க்ஷ்யோத்பாதனங்ஙளிலொன்னாணு மத்ஸ்யம். எந்நிருந்நிட்டும் கவர்ன்மெண்டு ஃபிஷரீஸினுவேண்டி செலவுசெய்யுன்னது வளரெ உச்ச மாணு. வெறும் 16 லக்ஷத்தில் சிலவானம் மாத்ரம். பஞ்சவத்ஸரபத்ததியில் மத்ஸ்ய வ்யவஸாயாபிவ்ருத்திக்குவேண்டி வச்சிட்டுள்ளது 45 லக்ஷம் மாத்ரமாணு. அதில் 1953-54 ல் 26 லக்ஷம் செலவுசெய்து. இக்கொல்லம் செலவாக்கியது 6 லக்ஷம். வரும்கொல்லத்தில் செலவாக்காவுன்னுத்தேசிக்குன்னது 5 லக்ஷம். அங்ஙனெ ஆகெக்கூடெ செலவாக்குன்னது 37 லக்ஷமாணு. நீக்கிவச்சதில்நின்னு 8 லக்ஷம் கரச்சாணு செலவுசெய்யுன்னது. மத்ஸ்ய வ்யவஸாயம் அபிவ்ருத்திப்பெடுத்துன்னதினெப்பற்றி கவர்ன்மெண்டு நல்லபோலெ ஆலோசிச்சிட்டில்லெந்நாணு ஞான் விசாரிக்குன்னது. ஈ துக எங்ஙனெயாணு செலவாக்கி விட்டுள்ளதென்னு பரிசோதிக்கம். உப்பின்னு ஸப்ஸிடியாயி 4·26 லக்ஷம் உருப்பிக, போட்டுகள் உண்டாக்கிக்கொடுக்குன்னதினாயி 74,000 க., ஃபிஷ்ஸீ ஃபிஷிங்கினுவேண்டுன்ன உபகரணங்ஙள்க்கும் மறவுமாயி 3·60 லக்ஷம். ஈ துககள் பரிசோதிச்சால் ஏறவும் ப்ரதானப்பெட்ட கார்யங்ஙள்க்கு, வளரெ நல்ல துககள் செலவாக்கேண்ட இனங்ஙள்க்கு கவர்ன்மெண்டு செலவாக்குன்னது ஏறவும் கரச்சாணென்னாணு காணுன்னது.

"ஃபிஷரி டிபார்ட்மெண்டினெ ப்ரவர்த்தனம்கொண்டு ஃபிஷ்ஸீ ஃபிஷிங்ஙு இனியும் இவிடெ விஜயிச்சிட்டில்லெந்னு சூண்டிக்காணிச்சுகொள்ளட்டெ. ஜப்பான், நோர்வெ முதலாய ராஜ்யங்ஙளில் மத்ஸ்ய வ்யவஸாயம் வளரெ முந்நேறியிட்டுண்டு. மத்ஸ்ய வ்யவஸாயத்தெ அபி

8th March 1955] [Sri C. H. Kanaran]

വൃദ്ധിപ്പെടുത്താനുള്ള എല്ലാ സാദ്ധ്യതകളും നമ്മുടെ രാജ്യത്തും ഉണ്ട്. പക്ഷെ ഗവമ്മേൻറ് അതിനുവേണ്ടി കാര്യമായി ഒന്നും ചെയ്യുന്നില്ലെന്നുള്ളതാണ് പരമാർത്ഥം. ഒന്നും ചെയ്യിട്ടില്ലെന്ന് ഞാൻ പറയുന്നില്ല. പരിഷ്കൃതരീതിയിലുള്ള ചില ഉപകരണങ്ങളെല്ലാം വരുത്തിയിട്ടുണ്ട്. പക്ഷെ അവ മൂലം ശരിയായ ഫലം ഉണ്ടായിട്ടില്ല. ഇപ്പോഴും വളരെ കുറച്ചു മത്സ്യമേ കടലിൽനിന്നും പിടിക്കുന്നുള്ളു. ഡീപ്പ്സീഫ ഷിംഗ് തിരുവിതാംകൂർ-കൊച്ചിയിൽ വളരെ അഭിവൃദ്ധിപ്രാപിച്ചിട്ടുള്ളതായി അറിയുന്നു. തിരു-കൊച്ചിയിലുണ്ടായിട്ടുള്ള പുരോഗതിപോലും ഡീപ്പ് സീഫിഷിംഗിനെ സംബന്ധിച്ചിടത്തോളം നമുക്കുണ്ടായിട്ടില്ല. ഇക്കാര്യത്തിൽ ഗവമ്മേൻറ് കൂടുതൽ ശ്രദ്ധപതിപ്പിക്കേണ്ടിയിരിക്കുന്നു. പടിഞ്ഞാറൻ കടലിൽനിന്ന് നല്ല മത്സ്യങ്ങൾ ധാരാളം കിട്ടുമെന്നാണ് മത്സ്യങ്ങളെസംബന്ധിച്ചു വിവരമുള്ള ശാസ്ത്രജ്ഞന്മാരെല്ലാം അഭിപ്രായപ്പെട്ടിട്ടുള്ളത്. കിഴക്കൻ ഭാഗത്തും ധാരാളം മത്സ്യങ്ങളുണ്ട്. ഡീപ്പ്സീഫിഷിംഗ് അഭിവൃദ്ധിപ്പെടുത്തുന്നപക്ഷം ധാരാളം നല്ലയിനം മത്സ്യങ്ങൾ നമുക്ക് പിടിച്ചെടുക്കാൻ സാധിക്കും. അതിൽ ഗവമ്മേൻറ് കൂടുതൽ ശ്രദ്ധവയ്ക്കണമെന്ന് ഞാൻ ആഗ്രഹിക്കുന്നു.

"ഇനിയൊന്നു പറയാനുള്ളത് പിടിച്ച മത്സ്യങ്ങളെ ശരിയായി സൂക്ഷിക്കുന്നതിനും വിററഴിക്കുന്നതിനുമുള്ള ഏർപ്പാടുകളെപ്പററിയാണ്. ഇന്ന് പിടിക്കുന്ന മത്സ്യത്തിൽ 30 ശതമാനം ഉപയോഗശൂന്യമായിപോകുന്നുണ്ടെന്ന് റിപ്പോർട്ടിലുണ്ടെന്നു പറയുന്നു. മത്സ്യം ചീഞ്ഞയാകാത്ത ഭൂപ്രദേശങ്ങളിലെത്തിച്ച് വിററഴിക്കുന്നതിനുള്ള സൌകര്യങ്ങളില്ലാത്തതുകൊണ്ടാണ് ഇത്രയും മത്സ്യം ചീഞ്ഞയായിപ്പോകുന്നത്. മത്സ്യം ചീത്തയാകാതെ സൂക്ഷിക്കുന്നതിനുള്ള ഏർപ്പാടുകൾ നമ്മുടെ രാജ്യത്തു വളരെ മോശമാണ്. കോൾഡുസ്റ്റോറേജ് സൌകര്യമുള്ള ആറ് മോട്ടോർ വണ്ടികളാണ് സംസ്ഥാനത്തു ആകപ്പാടെയുള്ളത്. ഈ ആറ് വണ്ടികൾ ഇവിടത്തെ ആവശ്യത്തിന് തീരെ തികയാവുകയില്ല. പടിഞ്ഞാറൻ തീരത്തെ സംബന്ധിച്ചു പറയുകയാണെങ്കിൽ, ഒരൊററ വണ്ടി മാത്രമാണ് ഇപ്പോഴുള്ളത്. കടൽതീരമുള്ള ഓരോ താലൂക്കിലും ഓരോ വണ്ടിയെങ്കിലും ഉണ്ടെങ്കിലേ മത്സ്യസംഭരണവും വിതരണവും ശരിയായി നടക്കൂ. അതിനുള്ള ഏർപ്പാട് ഗവമ്മേൻറ് ചെയ്താൽ മത്സ്യം പിടിക്കുന്ന ആളുകൾക്ക് കൂടുതൽ ആദായം കിട്ടും. മത്സ്യം ആവശ്യമുള്ള ഉപഭോക്താക്കൾക്കും പ്രയാസം കൂടാതെ ആദായത്തിൽ മത്സ്യം കിട്ടും. ഇപ്പോൾ ഉൾനാടുകളിലേയ്ക്ക് മത്സ്യം കൊണ്ടുപോകുന്നതിന് യാതൊരു സൌകര്യവുമില്ലാതെയാണിരിക്കുന്നത്. ബസ്സുകളിൽ മത്സ്യം കൊണ്ടുപോകാൻ സാദ്ധ്യമല്ല. ഉൾനാടുകളിൽ മത്സ്യമെത്തിക്കാനുള്ള യാതൊരേർപ്പാടും ഇന്നില്ല. കൂടുതൽ വണ്ടികൾ ഏർപ്പെടുത്തുന്ന കാര്യം ഗവമ്മേൻറ് പ്രത്യേകം ശ്രദ്ധിക്കണമെന്ന് ഞാൻ ആഗ്രഹിക്കുന്നു. അതുപോലെ നദിയിനുകളിലും മത്സ്യം കൊണ്ടുപോകുന്നതിനുള്ള പ്രത്യേക ഏർപ്പാടുകൾ ചെയ്യണം. ഇന്ന് യാത്രക്കാരുടെ സുഖത്തിനായി ശീതോഷ്ണസ്ഥിതി നിയന്ത്രിച്ചുകൊണ്ടുള്ള എയർ കണ്ടീഷൻഡ് കോച്ചുകളും മററും നടപ്പിൽവന്നിട്ടുണ്ട്. അതുപോലെ മത്സ്യം കൊണ്ടുപോകുന്നതിന് കോൾഡ്സ്റ്റോറേജ് സൌകര്യമുള്ള പ്രത്യേക കോച്ചുകൾ ഏർപ്പെടുത്താൻ വലിയ പ്രയാസമുണ്ടാവുകയില്ലെന്നാണ് എനിക്ക് തോന്നുന്നത്. അതു ചെയ്യുകയാണെങ്കിൽ ഇന്ന് മത്സ്യം കിട്ടാത്ത പ്രദേശങ്ങളിലെല്ലാം നിഷ്പ്രയാസം മത്സ്യം എത്തിച്ചുകൊടുക്കാൻ സാധിക്കും. ഇപ്പോൾതന്നെ തിരൂരിൽനിന്ന് മദ്രാസിൽ മത്സ്യം കൊണ്ടുവരുന്നുണ്ട്. പക്ഷെ തുച്ഛമായ ഒരളവിൽ മാത്രമേ കൊണ്ടുവരുന്നുള്ളു. ഇങ്ങനെ പേരിന് കൊണ്ടുവരുന്നതുകൊണ്ടെന്നും ആവശ്യത്തിന് മതിയാവില്ല. എല്ലാ തീവണ്ടികളിലും പ്രത്യേകം കോൾഡ്സ്റ്റോറേജ് കോച്ചുകൾ ഏർപ്പെടുത്തണം. ഉൾനാടുകളിലെല്ലാം മത്സ്യമെത്തിച്ചുകൊടുക്കുന്നതിന് മതിയായ മോട്ടോർവണ്ടികളും ഏർപ്പെടുത്തണം. ചുരുങ്ങിയ ചെലവിലും ഹിതയായിപ്പോകാതെയും എല്ലാ ദിക്കിലും മത്സ്യം എത്തിച്ചുകൊടുക്കുന്നതിനുള്ള ഏർപ്പാടുണ്ടെങ്കിലേ മത്സ്യവ്യവസായം ശരിയായി അഭിവൃദ്ധിപ്പെടാൻ പോകുന്നുള്ളു.

"കടലിൽനിന്നല്ലാതെ ഉൾനാടുകളിലെ ജലാശയങ്ങളിലും ധാരാളമായി മത്സ്യം വളർത്താൻ സാധിക്കും. ഇപ്പോൾ പലയിടത്തും അതു ചെയ്തുവരുന്നുണ്ട്. 1952-53 ൽ 708,251 പൌണ്ട് മത്സ്യം ഗോദാവരി ജലാശയത്തിൽനിന്നും കിട്ടിയിട്ടുള്ളതായി കണക്കുകൊണ്ടു കാണുന്നു. മററു പല സ്ഥലങ്ങളിലും ഇതുപോലെ മത്സ്യം വളർത്താൻ ഗവമ്മേൻറ് ശ്രമിച്ചുവരികയാണെന്നും പറയുന്നുണ്ട്. ഇതു വോര. ഈ പ്രവർത്തനം ഒന്നുകൂടെ ഉജ്ജീവിപ്പെടുത്തി കഴിവുള്ള എല്ലാ സ്ഥലങ്ങളിലും കൂടുതൽ മത്സ്യം ഉല്പാദിപ്പി

[Sri C. H. Kanaran] [8th March 1955

ക്കാനുള്ള ശ്രമം ഗവമ്മേൻറ് നടത്തണം എന്നാണ് എനിക്ക് ചൂണ്ടിക്കാണിക്കുവാനുള്ളത്. ഇപ്പോൾ നാട്ടിൽ കൂടുതൽ കൂടുതൽ വാട്ടർ റിസർവോയറുകൾ ഗവമ്മേൻറ് പണിതുവരികയാണ്. അവയിലെല്ലാം എത്രത്തോളം മത്സ്യം വളർത്താൻ കഴിയുമെന്നു കൂടി ഗവമ്മേൻറ് അന്വേഷിക്കേണ്ടതാണ്. മലമ്പുഴ മുതലായ അണക്കെട്ടുകൾ ഉണ്ട്. അവിടേയും വേഗത്തിൽ മത്സ്യം വളർത്തേണ്ടുള്ള ഏർപ്പാടുകൾ വേണം.

"മത്സ്യവ്യവസായത്തിലേർപ്പെട്ടിരിക്കുന്ന ആളുകളുടെ സ്ഥിതി എന്താണെന്നു പരിശോധിക്കേണ്ടതും ഈ അവസരത്തിൽ ഏററവും അത്യാവശ്യമായിട്ടുള്ള ഒരു കാര്യമാണ്. മറേറതൊരു വിഭാഗത്തേക്കാളും മോശമായ നിലയിൽ കഴിയുന്നവരാണ് മത്സ്യവ്യവസായികൾ. എല്ലാക്കാലത്തും കടലിൽനിന്ന് മത്സ്യം കിട്ടുമെന്നു ഉറപ്പില്ല. വർഷകാലങ്ങളിലും മററും മീൻ പിടിക്കാൻ സാദ്ധ്യമല്ല. കിട്ടുന്ന മത്സ്യത്തിനു തന്നെ ശരിക്കുള്ള വില കിട്ടുന്നില്ല. കരയിൽ ഭൂമിയുടെ അധിപന്മാരായി ഒരു കൂട്ടം രാജാക്കന്മാരുള്ളതുപോലെ കടലിൽ രാജാക്കന്മാരില്ല എന്ന് കരുതുന്നതു ശരിയല്ല. യാഥാർത്ഥ്യം കണ്ടുതറിയുമ്പോൾ അവിടെയുമുണ്ട് ഒരുതരം രാജാക്കന്മാരെന്നു മനസ്സിലാകും. മത്സ്യക്കച്ചവടക്കാരായ പണമിടവാടുകാരാണ് അവർ. മത്സ്യവ്യവസായി പിടിക്കുന്ന മത്സ്യത്തിനു തുച്ഛമായ വിലയേ അവന് കിട്ടുന്നുള്ളു. അഞ്ചുറുപ്പികയുടെ മത്സ്യത്തിന് ഒന്നരയോ രണ്ടു ഉറുപ്പികയേ അവനു കിട്ടൂ. പശ്ചിമതീരത്തിലെങ്ങും നടന്നുകൊണ്ടിരിക്കുന്ന ഒരു എപ്പാടാണിതു്. ധാരാളം മത്സ്യം കിട്ടിയാലും പിടിക്കുന്ന തൊഴിലാളിക്ക് അതുകൊണ്ടു വലിയ ആദായമൊന്നും കിട്ടുന്നില്ല. അവരുടെയിടയിൽ സാമ്പത്തികമായ പരാധീനത വളരെയുണ്ട്. പണം കടംകൊടുത്തിട്ടുള്ളവർ നേരത്തേ ഒരു വില നിശ്ചയിച്ചു് കരാറു ചെയ്തിട്ടുണ്ടായിരിക്കും. തങ്ങൾ പിടിച്ചുകൊണ്ടുവരുന്ന മത്സ്യം മുഴുവൻ അടിമകളെപ്പോലെ തുച്ഛമായ വിലക്ക് പണമിടവാടുകാരനു അടിയറവയ്ക്കുവാൻ അവർ നിർബ്ബന്ധിതരാകുന്നു. മത്സ്യത്തൊഴിലാളികളെ ഈ പണമിടപാടുകാരുടെ പിടിയിൽനിന്നു രക്ഷിക്കാൻ ഗവമ്മേണ്ട് യാതൊന്നും ചെയ്തിട്ടില്ല. സഹകരണസംഘങ്ങൾ രൂപീകരിച്ചു് മത്സ്യത്തൊഴിലാളികളെ സഹായിച്ചുവരുന്നുണ്ടെന്ന് ഗവമ്മേണ്ട് പറയും. ഈ സഹകരണസംഘങ്ങൾ എങ്ങനെയാണ് പ്രവർത്തിക്കുന്നതെന്നു ഒന്നു പരിശോധിച്ചുനോക്കാം. ഈ സംസ്ഥാനത്തു് തെക്കൻ കർണ്ണാടകത്തിലും മലബാറിലും ആണ് മത്സ്യത്തൊഴിലാളികളുടെ സഹകരണസംഘങ്ങൾ അധികമുള്ളത്. തെക്കൻ കർണ്ണാടകത്തിൽ 49 സംഘങ്ങളും മലബാറിൽ 65 സംഘങ്ങളും നിലവിലുണ്ട്. മലബാറിലെ ഈ എല്ലാ സൊസൈററികളിലുംകൂടി 9,426 പേർ മാത്രമേ അംഗങ്ങളായുള്ളു. എന്നുവച്ചാൽ ആകെയുള്ള മത്സ്യത്തൊഴിലാളികളിൽ വളരെ തുച്ഛമായ ഒരു ശതമാനം മാത്രമേ ഈ സൊസൈററികളിൽ അംഗമായി ചേർന്നിട്ടുള്ളു. ഈ സൊസൈററികൾക്കെല്ലാംകൂടിയുള്ള പ്രവർത്തനമൂലധനം 1·78 ലക്ഷം ഉറുപ്പിക മാത്രമാണ്. ഇതുകൊണ്ടൊന്നും മത്സ്യത്തൊഴിലാളികളെ പണമിടവാടുകാരുടെ ചൂഷണത്തിൽനിന്നും രക്ഷിക്കാൻ സാദ്ധ്യമല്ല. എല്ലാ മത്സ്യത്തൊഴിലാളികളേയും സഹകരണാടിസ്ഥാനത്തിൽ സംഘടിപ്പിക്കുക, പണമിടവാടുകാരെ ഈ സൊസൈററികളിൽ കടത്തിവിടാതിരിക്കുക, ഗവമ്മേണ്ട് ധനസഹായം ചെയ്യുക, മത്സ്യം ചീത്തയാകാതെ സൂക്ഷിക്കുന്നതിനുള്ള കോൾഡ്സ്റ്റോറേജുകൾ ഏർപ്പെടുത്തിക്കൊടുക്കുക, ഉൾനാടുകളിൽ മത്സ്യം എത്തിക്കുന്നതിനുള്ള വാഹനസൗകര്യമുണ്ടാക്കിക്കൊടുക്കുക, ഇവയെല്ലാമാണ് മത്സ്യവ്യവസായത്തിന്റേയും മത്സ്യത്തൊഴിലാളികളുടേയും അഭിവൃദ്ധിക്കായി ഗവമ്മേണ്ട് ഉടനെ ചെയ്യേണ്ടിയിരിക്കുന്നതു്. മത്സ്യത്തൊഴിലാളികളുടെയിടയിൽ വിദ്യാഭ്യാസത്തിനുള്ള സൗകര്യങ്ങളും വളരെ കുറവാണ്. സമയക്കുറവുകൊണ്ട് അതിനെപ്പററിയൊന്നും ഇപ്പോൾ പറയാൻ നിവൃത്തിയില്ല. ഞാൻ ഇപ്പറഞ്ഞ കാര്യങ്ങളെല്ലാം ശ്രദ്ധിച്ചു ഇന്നാട്ടിലെ മത്സ്യവ്യവസായത്തേയും മത്സ്യത്തൊഴിലാളികളേയും അഭിവൃദ്ധിപ്പെടുത്താൻ ഗവമ്മേണ്ട് കൂടുതൽ ശ്രദ്ധപതിപ്പിക്കണമെന്ന് അപേക്ഷിച്ചുകൊണ്ട് ഞാൻ അവസാനിപ്പിച്ചുകൊള്ളുന്നു."

DEPUTY SPEAKER :—"The House will now adjourn and meet again tomorrow at 8-30 a.m."

The House then adjourned.

Appendix I.

[Vide answer to starred question No. 1163 asked by Sri K. Aranganathan at the meeting of the Legislative Assembly held on 8th March 1955, page 94 supra.]

Steps taken by the Government to check, prevent and cure the jassid attack on paddy crop.

The Government cannot obviously undertake measures entirely at their own cost for tackling the crop diseases in the field of the ryots. The Government Agricultural Department can only advise and indicate the methods and assist the ryots to check and cure the disease. The following steps are taken to assist the ryots in this regard :—

During the cropping season of paddy a vigilant watch is kept up by the Plant Protection staff in all paddy tracts and as soon as the infestation of the pest is noticed, prompt remedial measures are taken to keep the pest under control. Adequate stocks of pesticides and other chemicals are maintained in all Agricultural Depots well in advance of the season. In cases of heavy infestation, the Collector of the concerned district is addressed by the District Agricultural Officer intimating him of the serious nature of the pest infestation so that he may, if he considers it necessary, declare the area as a "Pest affected area" with the approval of the Director of Agriculture. All the cultivators in an area which is so declared as a pest affected area are supplied with the requisite pesticides at a concessional rate which is only 50 per cent of the normal rate. The Crop and Plant Protection Officer (Entomology), Coimbatore, will immediately survey the area to guage the virulence of the pest and with the assistance of the Plant Protection Assistants and other Departmental staff in the district, large scale spraying and dusting campaigns are organised to fight the pest. When the situation warrants, the pesticides and spraying or dusting equipment will be pooled from neighbouring areas to combat the trouble. But in spite of all endeavours owing to the prevalence of extremely favourable weather conditions for the rapid multiplication of pest, serious attacks due to jassids occur. Weekly forecasts of pests including the jassid attack on paddy are sent to the Director of Information and Publicity and Station Directors, All-India Radio Stations, for giving wide publicity and the ryots are advised to take prompt measures of control advocated by the Agricultural Department.

Experiments conducted in respect of control of jassid pest and the results thereof.

The jassid (Nephotettix bipunctatus F) is the green spotted bug, small in size, widespread and appearing often in large numbers on young paddy crop. The white jassid (Tettigoniella spectra) slightly bigger in size, is also noticed but not in pest form. Hand netting and light traps are mechanical methods of control advocated in the past. Of late, since 1948, this insect is noted in increasing numbers in several parts of the State, in successive

crops, assuming epidemic form. Experiments on insecticidal methods of control were started in 1948 and pursued for some years at the Agricultural Research Institute, Coimbatore. The following results have been arrived at from the experiments conducted :—

The paddy jassid is more virulent in well irrigated tracts having a preference to young crops under one or two months. DDT either as spray or dust has a spectacular effect. Between the two forms, the spray has been found to be cheaper, i.e., two lb. of "Guesarol 550" in suspension in 100 gallons of water can be used to treat an acre and the cost of such treatment works out to Rs. 6. DDT emulsion in kerosene though effective is costly. The preference of the pest to small patches of newly transplanted paddy under well irrigation affords a vulnerable point for treatment and it is easy to tackle these limited areas promptly and effectively. Where there is combined infestation by green and white jassids and another fulgorid bug (Nilaparvata lugens) a mixture of DDT 5 per cent and BHC 10 per cent dust in equal proportions has been found to be effective.

Cheap and effective treatment recommended by the Agricultural Department for the treatment of the jassid pest.

The cheapest and most effective method suggested to ryots for eradication and prevention of jassid attack on paddy crops is dusting with DDT 5 per cent dust at the rate of 15 to 20 lb. per acre and spraying DDT 50 per cent in wettable form at 1 lb. in 50 gallons of water at the rate of 80 to 100 gallons spray fluid per acre.

APPENDIX II.

[Vide answer to starred question No. 1184 asked by Sri S. Ramalingam at the meeting of the Legislative Assembly held on 8th March 1955, page 111 supra.]

The following are the terms of reference to the Committee appointed to enquire into the working of the District Revenue Administration :—

(1) A thorough review of the existing set-up in the Collector's office with special reference to devising ways and means of providing such measure of relief to the District Collector as to enable him to function effectively as the head of the district responsible for the entire field of developmental activity under his charge.

(2) How best to strengthen and tone up the efficiency of Taluk offices which form the pivot of Revenue Administration, and also to make the Divisional Officer an effective link between the Tahsildar on the one hand and the District Collector on the other both in the field of Revenue Administration as also developmental work.

8th March 1955]

(3) To go into the question of recruitment, training, periodical refresher courses, etc., of the field staff of the department so as to enable them to function effectively not only as Revenue officials but also as competent development officers.

(4) To make such other recommendations calculated to improve the efficiency of Revenue Administration in the offices of the Collector, Revenue Divisional Officer and Tahsildar with particular reference to the prevention of delays, the various defects in their working, and the specific points requiring attention as mentioned in the Agenda prepared at the Collector's Conference (held in June 1954), viz. :—

(*a*) empowering Personal Assistants with greater statutory powers so as to give real relief to Collectors,

(*b*) the revision of the District Office Manual so as to improve the speed and quality of correspondence,

(*c*) the holding of periodical refresher courses for officers and subordinate staff of the Revenue department,

(*d*) the retention of the special election staff in Taluk, Divisional and Collector's offices as a permanent measure,

(*e*) improving the procedure of maintaining the personal files of Upper Division Clerks, Division Head Clerks and Taluk Head Accountants by Collectors,

(*f*) proposals for strengthening the offices of the Revenue department to overcome post-war inefficiency in District Administration,

(*g*) proposals for transferring the work of survey records and maintenance from the Survey department to the Revenue department,

(*h*) the sanction of the posts of typists for Taluk offices,

(*i*) introduction of more detailed training for Revenue Inspectors both in regular items of revenue work as well as in survey and land records maintenance work which could be entrusted to them,

(*j*) the appointment of Headquarters Deputy Tahsildars for heavy taluks,

(*k*) the upgrading to the Deputy Tahsildar's grade of the posts of Taluk Head Accountants and Head Clerks of Revenue Divisional offices, and

(*l*) the upgrading of the post of Magisterial Head Clerk in the Collector's office to that of a Deputy Tahsildar.

(5) To make specific proposals for the employment and absorption of Revenue subordinates affected by the introduction of the Separation of the Judiciary from the Executive in the districts.

(6) To make proposals to bring zamindari areas taken over by Government, in line with the regular district administration.

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS